தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 9 இதழ் : 1 நவம்பர் – 2012



**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்;**
**அவனவனுடைய கிரியைகளின்படி**
**அவனவனுக்கு நான் அளிக்கும் பலன்**
**என்னோடேகூட வருகிறது" - (இயேசு)**

வெளி. 22:12

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## சகோ. பிரேம்குமார் (Rtd. Manager, IOB) & சகோதரி ரஞ்சனி பிரேம்குமார் அவர்களின்

# பணித்தள வருகை - 16,17&18 செப். 2012



கலாச்சார வரவேற்பு



வாழ்த்துச் செய்தியளிக்கும் சகோ. பிரேம்குமார் அவர்கள்





சூலியா கிராம ஆலய விசுவாசிகள் மற்றும் ஆலய பிரதிஷ்டை



தேவ செய்தியளிக்கும் சகோதரி ரஞ்சனி பிரேம்குமார் அவர்கள்



தேவ வார்த்தைக்கு செவி சாய்க்கும் பீல் ஜனங்கள்



Accounts குறித்ததான சிறப்பு பயிற்சி



பயிற்சி பெறும் உழியர்கள்

# உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 2012ம் வருடத்தில் நவம்பர் மாதத்தை காணச்செய்த தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

தேவகிருபையினாலும் உங்கள் யாவரின் ஜெபங்கள் மற்றும் உதாரத்துவமான காணிக்கைகள் மூலமாக நம் ஷாலோம் ஊழியங்கள் பீல் மக்கள் மத்தியில் வெகு ஆசீர்வாதமாக நடைபெற்று வருகிறது. தேவனைத் துதித்து உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிக்கிறோம்.

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் ஊழியப்பாதையில் போதுமானவராக பராமரித்து பாதுகாத்து வழிநடத்தி வந்தார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். குறிப்பாக தூத்துக்குடி CSI கால்டுவெல் காலனி சபையிலிருந்து அன்பு போதகர் Rev. P.S. சாமுவேல் செல்வராஜ் அவர்களும், நம் ஷாலோம் ஊழிய செயற்குழு அங்கத்தினரான சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்களும் மற்றும் 18 பேரும் செப்டம்பர் 29,30 ஆகிய தேதிகளில் 23 பணித்தளங்களை பார்வையிட்டார்கள். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது.

அதுபோல் கன்னியாகுமரி மாவட்டம் CSI விரிகோடு சபை போதகர் Rev. காலின்ஸ் அவர்கள் தலையில் 4 சகோதரர்களும், Jesus Consoles ஊழியத்தின் சார்பில் 2 சகோதரர்களும் பணித்தளத்தை பார்வையிட்டு ஊழியங்களை செய்தார்கள். இந்த நாட்களில் 4 பணித்தள ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. **தேவனுக்கே மகிமை!**

மேலும் கடந்த மாதம் சுதேச ஊழியர்கள் கூடுகை, ஊழியர்களின் மனைவிமார்களின் கூடுகை, மூன்று மாநிலங்களில் உள்ள ஷாலோம் சபைகளின் வாலிப ஆண்கள், பெண்களுக்கான சிறப்பு முகாம்கள் 7 இடங்களில் நடத்தப்பட்டது. சுமார் 2000க்கும் அதிகமான வாலிபர்கள் பாவத்திலிருந்தும், பிசாசின் பிடியிலிருந்தும் விடுதலை பெற்றார்கள். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்.

அதுபோல் 3 மாநிலங்களில் உள்ள 600க்கும் அதிகமான ஷாலோம் சபைகளின் மூப்பர்களுக்கான சிறப்பு கூடுகை 11 இடங்களில் நடத்தப்பட்டது. மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்களை தேவன் அபிஷேகித்து புதிய தரிசனங்களையும், ஆத்துமபாரத்தையும் கொடுத்து ஆசீர்வதித்தார்.

**<u>நவம்பர் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்:</u>**

28.10.12, 04.11.12, 11.11.12 ஆகிய மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து ஷாலோம் சபைகளில் நடைபெறவுள்ள ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆராதனைகளுக்காக ஜெபியுங்கள். ஷாலோம் சபைகள் ஜெபிக்கும் சபைகளாக, ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாக, கொடுக்கும் சபைகளாக, சாட்சிகளாக திகழ ஜெபியுங்கள்.

நவம்பர் 15,16,17 தேதிகளில் நடைபெற உள்ள ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாமிற்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். இந்த முகாமில் அன்பு சகோதரர் மோகன் சி.

லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்கள் குழுவாக வந்து ஊழியங்களை நிறைவேற்ற உள்ளார்கள். பரிசுத்த ஆவியானவரின் பலத்த கிரியைகளுக்காக ஜெபியுங்கள். தேவ பாதுகாப்பிற்காகவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்கள் நெருங்குகிறது. ஷாலோம் திருச்சபைகளில் நற்செய்தி அறிவிக்கும் திருநாளாக ஆசரிக்க உற்சாகப்படுத்துகிறோம். சுதேச ஊழியர்களை தாங்குவோர் மற்றும் பீல் ஆதிவாசி மாணவர்களை தாங்குவோர் உங்கள் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான உற்சாகமான வெகுமதிகளை தவறாது அனுப்பி தரும்படியாக வேண்டுகிறோம்.

தொடர்ந்து ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் கல்வி பணிகளுக்காகவும், ஷாலோம் பள்ளி மற்றும் விடுதிகள், 3 Compassion projectகளும் ஆசீர்வதிக்கப்படவும் குஜராத் ஷாலோம் பணித்தள அலுவலகத்திற்காகவும், பணிபுரியும் அனைத்து தேவ ஜனங்கள் நன்கு பணிபுரியவும், தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் தேவஜனங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

அனைத்து ஷாலோம் பிரதிநிதிகள், ஊழியத்தை நேசித்து, ஜெபித்து தாங்கி வரும் அனைத்து சபைகள், ஊழியங்கள், குழுக்கள், குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்க நாங்கள் அனைவரும் பாரத்துடன் ஜெபித்து வருகிறோம்.

எங்கள் அன்பு பிள்ளைகள் டைட்டஸ், மெர்லின் மற்றும் ஷாலோம் எங்களுடன் இணைந்து பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகிறார்கள். ரஷ்யாவில் மருத்துவம் (3வருடம்) படித்து வரும் மகள் ஜாய் ஷெக்கினாவுக்காகவும் ஜெபியுங்கள்.

"உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன்... நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்" ஆகாய் 2:23ன்படி தேவன் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் V. தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் : | நேரம் : |
|---|---|
| **17.11.2012 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 12.00 மணி வரை 24 மணிநேரம்** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க விரும்பினால் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிப்பதற்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

**"இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்." (2 நாளா. 7:15)**



# இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன்

## – *இயேசு கிறிஸ்து*

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

நம் இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையின் நற்செய்தியை வரும் டிசம்பர் மாதம் நினைவுகூர்ந்து உலகமெங்கும் தேவஜனங்கள் கொண்டாடி துதிக்கும் நாட்களாயிருக்கிறது. சுமார் 2000 வருடங்களுக்கு மேலாக முதல் வருகையை நினைத்து ஆராதித்து கொண்டாடி வருகிற நாம் அதைவிட மேலான இரண்டாம் வருகையை குறித்து தியானித்து விழிப்புடன் ஆயத்தமாக வாழும்படி வேதம் நம்மை எச்சரித்து ஆலோசனை கூறுகிறது.

அப்போஸ்தலர் 1:11 வாசித்து பாருங்கள் ''கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்''. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபம் என்று மணவாட்டியான சபை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பரிசுத்த பவுல் திருச்சபைக்கு நிருபங்களை எழுதும்போது இவைகளை குறித்தும் எழுதியுள்ளார். இரண்டாம் வருகையைக் பற்றி அநேக காரியங்களை அறிய முடிந்தாலும், மூன்று காரியங்களை நாம் சற்று தியானிப்போம்.

1தெசலோனிக்கேயர் 4:16,17 வாசித்து பாருங்கள், ''ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 17. பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்''.

**முதலாவதாக,** கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். மரித்தோர் உயிர்த்தெழுதலும், நியாத்தீர்ப்பும் நிச்சயமாக உண்டு என்று வேதம் சொல்லுகிறது, அதை நாமும் விசுவாசிக்கிறோம். இந்த வசனத்தை வாசிக்கும்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் என்பதை மறந்துவிட கூடாது. வெளி.7:11,14 வாசிப்போம், ''தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: 14. அதற்குநான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன் இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.''

ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தோய்த்து வெளுக்கப்பட்டவர்கள் மட்டுமே அங்கு காணப்படுகிறார்கள். கிறிஸ்தவனாக பிறந்தபடியால் அல்லது ஆலயத்திற்கு ஒழுங்காக செல்வதால், திரளான காணிக்கை கொடுப்பதால், பெரிய பொறுப்புகளை ஊழியத்தில், சபையில் நிறைவேற்றுவதால் அல்ல; பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்று, இயேசுகிறிஸ்துவின் இரத்ததால் கழுவப்பட்டு, இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள், ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் மட்டுமே அந்த திரளான கூட்டத்தில் நிற்கமுடியும்.

லூக்கா 16ம் அதிகாரத்தில் ஐசுவரியவனான் லாசருவை பற்றி வாசிக்கிறோம். என் தகப்பனாகிய ஆபிரகாமே என்று பாதாளத்திலிருந்து அவன் வேதனையுடன் கூப்பிடுவதை காண்கிறோம். ஒருவேளை உலகத்தில் அவனுடைய இறந்த சரீரத்தை வைத்து அடக்கஆராதனை மிக சிறப்பாக நடத்தியிருக்கலாம். ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்படவில்லை எனில் பரலோகத்தில் இடம் இல்லை. சபை புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கலாம், திருமண்டல திருமண பதிவு புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கலாம், சபையின் மரண பதிவு புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மட்டுமே மரித்தோர் உயிர்த்தெழுந்து கிறிஸ்துவுடன் ஆளுகை செய்வார்கள். நாமும், நம் குடும்பத்தாரும், நம் சந்ததியும் ஆயத்தமாக உள்ளோமா? சற்று சிந்திப்போம்.

**இரண்டவதாக** தேவஜனங்கள் கிறிஸ்துவுடன் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள், 1 தெச.4:17 வாசித்துபாருங்கள், "பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு உயிரோடு இருக்கும் நாமும் ஆயத்தமாக இருக்கவேண்டும். பரலோக ராஜ்ஜியத்தை குறித்து மத்தேயு 25:1–13 வரை 10 கன்னிகைகளின் உவமை மூலமாக வாசித்து அறிகிறோம் அதில் 13வது வசனத்தை பாருங்கள் "மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்." தீவட்டிகளை பெற்றுகொண்டாலும் புத்தியில்லாத கன்னிகைகள் எண்ணெய் இல்லாமல் இருந்தார்கள். ஒருவேளை மணவாளன் இப்போது வரமாட்டார் என்று வருகையை குறித்து அவிசுவாசமும் தவறான எண்ணம் கொண்டிருந்தார்கள். மேலும் மணவாளன் வந்து விட்டால் எப்படியாவது சுற்றி உள்ளவர்களை வைத்து சமாளித்து விடலாம் என நினைத்தார்கள். நம்மை சுற்றி சபை, ஊழியர்கள், போதகர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், நம் குடும்பத்தார் அந்த வேளையில் உதவுவார்கள் என்று தவறான எண்ணத்துடன் வாழ்ந்தார்கள். மட்டுமல்ல நம்முடைய ஆண்டவர் அன்பு தயவுள்ளவர். நமக்காக கதவை திறந்தே வைத்திருப்பார், நம்மை கைவிடமாட்டார் என்று தவறான எண்ணம் கொண்டார்கள்.

எனக்கன்பானவர்களே, புத்தியில்லாத கன்னிகைகளைபோல் இயேசு எப்போது வருவார்? இப்போது வரமாட்டார் என்று பிசாசின் தந்திரமான நிர்விசாரமான ஆலோசனைக்கு விலகியிருப்போம். நாமும் அறியாத வேளையில் இயேசுகிறிஸ்து வரும்போது நமக்கு உதவி செய்ய யாரும் வரமுடியாது. ஆகவே நமக்கு கிருபையினால் கொடுக்கப்பட்ட இரட்சிப்பையும்,

பரிசுத்த ஆவியானவரையும், வரங்களையும் கிறிஸ்துவுக்குள் அனுதினமும் காத்து வாழ்வோம். இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையில் கிருபையுள்ளவராக வந்தார். கிருபையின் காலத்தில் வாழ்கிறோம். கிருபையில் நிலைத்திருந்து காத்துக்கொள்வோம். இரண்டாம் வருகையில் அவருடைய பயங்கரமான நியாயத்தீர்ப்பை உணர்ந்தவர்களாய் ஜீவிப்போம். "முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்" மத்தேயு 24:13

கடைசியாக, இயேசுகிறிஸ்து தான் மறுபடியும் வரும்போது அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது என்று வாக்கு உரைத்துள்ளார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நமக்கு பலவிதமான பலன்களை தருகிறார். அதை நாம் பெற்றுக் கொள்ள தேவன் நமக்கு இந்த உலகில் கொடுத்த நன்மைகளை, தாலந்துகளை தேவனுக்கு பயன்படுத்தவேண்டும். அதை தேவன் எதிர்பார்க்கிறார். எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்று தேவன் சொல்லுகிறார்.

மத்தேயு25ம் அதிகாரத்தில் 14 முதல் 20 வரை தாலந்துகளை பற்றிய உவமையை கொண்டு இயேசுகிறிஸ்து பரலோக ராஜ்ஜியத்தை விளக்கியுள்ளார். அந்த உவமையில் அனைவருமே தாலந்துகளை பெற்றவர்கள். அவனவன் திறமைக்குத் தக்கதாக பகிர்ந்து 5,2,1, என்று கொடுத்துள்ளார். திரும்பி வந்தபோது அவர் கணக்கு கேட்கிறார். ஐந்து தாலந்து பெற்றவனும், 2 தாலந்து பெற்றவனும் இருமடங்காக உழைத்து கணக்குகளை கொடுத்தார்கள். எஜமானனும் மகிழ்ந்தார்.

பிரியமானவர்களே, இவ்வுலகில் வாழும் நாம் அனைவருக்கும் தேவன் மூன்று கிருபைகளை தந்துள்ளார். 1) Time (காலம்) 2) Talent (கிருபை வரங்கள், தாலந்துகள்) 3) Treasure (செல்வம்).

**காலம் (Time)** நாம் உயிர்வாழும் 60 அல்லது 70 அல்லது 80 வருடங்களில் எத்தனை ஆத்துமாக்களை தேவனண்டையிலே கொண்டு வந்தோம். 60 அல்லது 70 அல்லது 80 ஆத்துமாக்களை கூட தேவனண்டை நடத்தாமல் வெறுங்கையுடன் எப்படி அவரை சந்திப்போம். ஆகவே தேவன் நமக்குத் தந்த இந்த பொன்னான நேரத்தை அவருடைய நாம மகிமைக்காகவும், அவருக்காக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதிலும் செலவிடுவோம்.

**தாலந்துகள் (Talent)** தேவன் நமக்கு இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியானவரையும் தந்துள்ளார். ஆவிக்குரிய கிருபை வரங்களை தந்துள்ளார். மட்டுமல்ல அவனவன் திறமைக்குதக்கதாக பாடுவது, பேசுவது, சபைகளில், ஊழியங்களில் முன்நின்று காரியங்களை நடத்துவது போன்ற பல கிருபைகள், தாலந்துகளை தந்துள்ளார். இவைகள் எதற்காக? ஆத்தும ஆதாயம் செய்வதற்கும், திறப்பில் நின்று ஜெபிப்பதற்கும், ஊழியங்களுக்கும், சபைகளில் தேவஜனங்களுக்கு உறுதுணையாக நின்று தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டுவதற்காகத்தான் தந்துள்ளார். ஒவ்வொரு விசுவாசியும் தனக்குத் தேவன் கொடுத்த ஆவிக்குரிய நன்மைகளையும், தேவன் தந்த ஞானத்தை, தாலந்துகளை பயன்படுத்தும்போது தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்படும்.

**செல்வம் (Treasure)** மத்தேயு 25ம் அதிகாரம் 31–40வரை உள்ள வசனங்களை வாசிக்கும் போது, மேய்ப்பனானவன் செம்மறி ஆடுகளையும், வெள்ளாடுகளையும் பிரிப்பது போல

ஆசீர்வதிக்கப்பட்டவர்களையும், சபிக்கப்பட்டவர்களையும் கர்த்தர் இரண்டாகப் பிரித்து, கூறுகிறார் : என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, நான் பசியாயிருந்தேன், தாகமாயிருந்தேன், அந்நியனாயிருந்தேன், வஸ்திரமில்லாதிருந்தேன், வியாதியாயிருந்தேன், காவலிலிருந்தேன். இது யாரை பற்றி கூறுகிறார். இந்த சிறிய என் சகோதரர் என்று கூறுகிறார்.

எனக்கன்பானவர்களே, தேவன் நமக்கு அநேக செல்வங்களை இந்த உலகில் தந்துள்ளார். இந்த உலகத்தில் குறிப்பாக நம் தேசத்தில் வாழும் பல கோடி ஜனங்கள் சரீரத்திலும், ஆத்துமாவிலும் ஆயிரம் தேவையுள்ளவர்களாய் வாழ்ந்துவருகிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க சுவிசேஷகர்களை ஜெபித்து, அனுப்பி தாங்குவோம். ஏழை விசுவாசி ஜனங்களுக்கு, பிள்ளைகளுக்கு உதவி செய்து கல்வியறிவு கொடுப்போம். ஆராதிக்க கூடம் இல்லாதவர்களுக்கு ஆலயங்களை கட்டிக் கொடுப்போம். பல நூறு கிராமங்களில் மருத்துவப் பணிகளைச் செய்வோம். Love God and Love your neighbour என்ற கட்டளையின்படி நமக்கு தந்த செல்வங்களை தேவனுடைய ராஜ்ஜியத்தின் கட்டுமானப் பணிக்காக விதைப்போம். வருகையின் நாளில் அதை மனிதருக்காக, சபைக்காக, ஸ்தாபனத்திற்காக அல்ல, இயேசுவுக்கே செய்தோம் என்ற ஆனந்தம் நம்மை நிரப்பும். தேவன் நமக்குத் தந்த இந்தக் கிருபைகளை நாம் இந்த உலகத்தில் வாழும்போது, பரலோக ராஜ்ஜியத்தின் மேன்மைக்காக பயன்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

"அவர் வரும் நாளிலே என்னை கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்ந்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிபாடியே மகிழ்ந்திருப்பேன்"

# `ôúXôm ª`ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
|---|---|
| **10.11.2012, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்


*தேவ செய்தி :* ***T.* ஜெயசிங்**
விரிகோடு

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

# நினைவூட்டுகிறோம்......

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களே...



அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்மஸ் நாட்களை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்மஸைக் கொண்டாட நாம் ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாக படித்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தும் வருகிறார்கள்.

பீல் ஆதிவாசி சிறுவர்களின் கல்வி மற்றும் கிறிஸ்மஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசி பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த காணிக்கையை ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்மஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம்.

பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாக கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுக்கலாம் அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு உண்டியலைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

## Yôd Ï jRjR B ºoYôR ù_Td áÓûL

நாள் : **03.11.2012 (சனிக் கிழமை)**

நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை**

இடம் : **தலைமை அலுவலகம் அன்பு பகிர்வு இயக்கம்,**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்**

பாளையங்கோட்டை

ஜெபியுங்கள் ! ஜெபியுங்கள் !

`ôúXôm ÑúRN F¯Vo

# குடும்ப எழுப்புதல் தரிசன முகாம் - 2012

| இடம் | நாள் |
|---|---|
| **SPIRITUAL LIFE CENTRE**<br>**பரூச், குஜராத்** | ***15,16,17,***<br>***நவம்பர் – 2012*** |





வல்லமையின் செய்தி :

## சகோ. மோகன் சி. லாசரஸ்

இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி

## Pr. ஆல்வின் தாமஸ்

(ரூஹா ஊழியங்கள், சென்னை)





## Rt. Rev. Dr. V. தேவதாஸ்

(பேராயர், ஷலோம் திருமண்டலம்)

## சகோதரி. வஹிதா தேவதாஸ்

(அன்பு பகிர்வு இயக்கம்)

**மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்**



# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு**

தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒவ்வொரு வருடமும் பணித்தளங்களில் மூன்று மாநிலங்களிலும் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆசரிக்கப்பட்டுவருகிறது. இந்த ஆண்டும் அக்டோபர் 28ம் தேதி இராஜஸ்தானிலும், நவம்பர் 4ம் தேதி குஜராத்திலும். நவம்பர் 11ம் தேதி மத்தியப்பிரதேசத்திலும் நடத்த ஜெபித்துத் தீர்மானித்துள்ளோம். கர்த்தர் இந்த நாட்களை ஆசீர்வதிக்கவும், பீல் மக்கள் கர்த்தருக்காக தங்கள் விளைவின் பலன்களை உதாரத்துவமாக படைக்கவும், தேவன் அவர்களை ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப எழுப்புதல் மாநாடு – 2012**

கர்த்தருக்கு சித்தமானால் **நவம்பர் 15,16,17** தேதிகளில் நம் 500 ஷாலோம் ஊழியர்கள் குடும்பங்களுக்காக நடைபெற உள்ள முகாமின் ஆயத்தங்கள், இடம் மற்றும் நிதியுதவி, ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்பட ஜெபியுங்கள். விசேஷித்த சிறப்புச் செய்தி கொடுக்கும் அன்பு **சகோதரர் மோகன் சி. லாசரஸ்** (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்களுக்காகவும், மற்றும் தேவ செய்தி அளிக்கும் சுவிசேஷகர்கள், போதகர்களை தேவன் பயன்படுத்தவும், இம்முகாம் மூலமாக 2015ம் ஆண்டில், 1000 சுதேச ஊழியர்கள், 1000 சபைகள் உருவாகவும் 2020ம் ஆண்டில் 10 இலட்ச ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

**வேதாகமங்கள் வழங்கும் சிறப்புத் திட்டம்**

இவ்வருடத்தில் அநேக நூற்றுக் கணக்கான புதிய குடும்பங்களை தேவன் இரட்சித்து வருகிறார். இவ்வருட இறுதிக்குள் ஒரு வேதாகமத்திற்கு ரூ.100/– வீதம் நிதிவுதவி கொடுத்து 10,000 வேதப் புத்தகங்களை வாங்குவதற்காக ஆதரவாளர்கள் கிடைக்க பாரத்துடன் ஜெபியுங்கள். தாங்க முன் வாருங்கள்.

**ஷாலோம் கிராம ஆலய கட்டுமான பணிகள்**

தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களில் 25 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. அதற்கு தேவையான நிதித்தொகை இன்னும் **ரூ.5 இலட்சங்கள்** கிடைக்க பெற ஜெபியுங்கள். மேலும் 25 கிராமங்களில் ஆரம்பிக்க உள்ள கட்டுமானப் பணிகள் ஆசீர்வாதமாக இருக்க, தடைகள், எதிர்ப்புகள் நீங்கும்படியாக ஜெபியுங்கள். குறிப்பாக **ரூ.10 இலட்சம்** செலவில் கட்டப்பட்டு வரும் கோய்க்கா – ஷாலோம் ஆலய கட்டுமானப் பணிகள் விரைவில் முடிக்கப் பெற ஜெபியுங்கள்.

## **CSI.** LôpÓùYp ¨û]Ü BXVm (ç jÕdÏ¥) NûTVô¬u T¦ jR[ YÚûL - 29&30 ùNl.2012

தூத்துக்குடி கால்டுவெல் நினைவு ஆலயத்திலிருந்து 20 பேர் கொண்ட குழுவாக நமது ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடும்படியாக 28.09.2012 அன்று இரவு ஷாலோம் பணித்தள அலுவலகம் இருக்கும் தாகோத் என்ற ஊரை அடைந்தோம். பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் இருவரும் எங்களை அன்போடு வரவேற்று உபசரித்து, மிகவும் வசதியான தங்குமிடம் மற்றும் நல்ல உணவும் ஒழுங்கு செய்திருந்தனர்.

**29.09.2012 சனிக்கிழமை** காலை 8.00 மணிக்கு பேராயரின் இல்லத்திற்கு மேலாக முதல் மாடியில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த அறைகளை C.S.I கால்டுவெல் நினைவு ஆலய சபைகுரு **Rev. P.S. சாமுவேல் செல்வராஜ்** அவர்கள் பிரதிஷ்டை செய்தார்கள். அதன்பின் பணித்தள அலுவலகம், சிறுவர்களை பராமரிக்கும் Compassion Project அலுவலகம், Church Network அலுவலகம் அனைத்தையும் பார்வையிட தேவன் கிருபை செய்தார். எல்லாவற்றையும் ஒழுங்கும் கிரமமுமாகத் திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளதை பார்த்து மிகவும் ஆச்சரியத்துக்குள்ளானோம். குழந்தைகள் பராமரிப்பில் தாங்கப்படும் குழந்தைகளின் முழு விபரங்கள், தாங்குவோரின் விபரங்கள் அடங்கிய ஃபைல்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியாக வைக்கப்பட்டுள்ளன. இதேபோல் ஒவ்வொரு சபையின் முழுவிபரங்களும், சபை மக்கள் ஒவ்வொரு குடும்பத்தினர் விபரங்களும் அடங்கிய ஃபைல்கள் துவக்கப்பட்டிருப்பதைக் கண்டு வியப்பிற்குள்ளானோம். எல்லாம் ஒழுங்கும் கிரமமுமாய் செய்யப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

அதன்பின்பு 10 மணி அளவில் குஜராத், தாகோத்தில் ஷாலோம் பயிற்சிக் கூடத்தில் (Training Center) பணித்தள அலுவலக ஊழியர்கள் ஜெபகூடுகையில் பங்குபெற்று தேவனுடைய வார்த்தையை **Rev. P.S. சாமுவேல் செல்வராஜ்** அவர்கள் பகிர்ந்துக் கொண்டார்கள். 3 வாகனங்களில் பணித்தளத்தை பார்வையிட புறப்பட்டு சென்றோம். முதலாவது குஜராத்தில் 11 மணி அளவில் கொலானா திருச்சபையையும், 1 மணி அளவில் ஹிரோலா திருச்சபையையும் சந்திந்து விசுவாசிகளுடன் ஆராதித்து தேவவார்த்தைகளை பகிர்ந்துக் கொண்டோம். நமது திருச்சபையின் மூலம் தாங்கும் சுதேச ஊழியர் **வீர்சிங் பாபோர்** குடும்பத்தை சந்தித்து ஜெபித்து, அன்பளிப்புகளை கொடுத்து உற்சாகப்படுத்தினோம். அதன்பின்பு இராஜஸ்தான் மாநிலத்தில் கும்புரா கிராம ஆலயத்திற்கு வந்தோம். விசுவாசிகள் 11 மணியிலிருந்து நடனமாடி ஆராதித்து துதித்து கொண்டேயிருந்தார்கள். தேவனுடைய வார்த்தையை கொடுத்துவிட்டு உணவருந்தினோம்.

அதன்பின்பு பிஜல்பூர் கிராமத்தில் நடைபெற்ற ஷாலோம் ஊழியர்கள் மாதக் கூடுகையில் பங்குபெற்றோம். 225 பீல் சுதேச ஊழியர்கள் மிகவும் கருத்துடன் ஜெபித்து தேவனுடைய வார்த்தைகளை கேட்டு ஆவியில் நிறைந்து ஜெபித்ததை கண்டு வியந்தோம். **Rev. P.S. சாமுவேல் செல்வராஜ்** அவர்கள் ஊழியர்களுக்கான எழுப்புதல் செய்தியை வழங்கினார்கள். பிறகு அங்குள்ள ஷாலோம் பள்ளிகூடத்தையும், கட்டியிருந்த விடுதியில் பயிலும் சுமார் 250 ஆசிரம மாணவர்களை காண தேவன் கிருபை தந்தார். மிகவும் எளியமுறையில் உண்ண உணவு, உறைவிடம் வழங்கி நன்கு படிப்பறிவையும், வேத அறிவையும்

கொடுப்பது எத்தனை பாராட்டத்தக்கது! 10,000 ஆதிவாசி மாணவர்களை படிக்க வைத்து பீல் சமுதாயத்திற்கு ஆசீர்வாதமாக அமையவேண்டும் என்பது ஷாலோம் தரிசனமாக உள்ளது. அதன்பின்பு ஊழியங்களை முடித்து இரவு 9 மணிக்கு வந்து உணவருந்தி ஜெபம் செய்து இளைப்பாறினோம்.

**30.09.12 ஞாயிற்றுக்கிழமை** அன்று நாங்கள் அனைவரும் 6 குழுக்களாக பிரிந்து 3 மாநிலங்களிலும் 19 பணித்தளங்களில் உள்ள ஷாலோம் சபைகளில் நடைபெற்ற ஆராதனைகளில் பங்குபெறவும், தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ளவும் தேவன் கிருபை தந்தார்.

| எண் | குழுவினர் | மாநிலம் |
|---|---|---|
| **1.** | **பேராயர். தேவதாஸ் (ஷாலோம்)** | **மத்தியபிரதேசம்** |
| | | 1. தோரண்யா ஆலய பிரதிஷ்டை |
| | 1. Rev. P.S. சாமுவேல் செல்வராஜ் | 2. குவாலி சபை 3. பத்தரா சபை |
| | 2. திரு. கிங்ஸ்லி | 4. நவபாடா சபை 5. மான்லி சபை |
| | 3. திருமதி. ஜெயசீலி கிங்ஸ்லி | 6. காலாகேத் சபை |
| **2.** | **சகோதரி. வஹிதா தேவதாஸ் (ஷாலோம்)** | **மத்தியபிரதேசம்** |
| | 1. திருமதி. சரோஜா சாமுவேல் | 7. அந்தர்வேலியா சபை |
| | 2. சகோதரி. ஹெப்சி | 8. தேதலா சபை |
| | | 9. முண்டத் சபை |
| **3.** | **சகோ. ஜெயராஜ் (ஷாலோம்)** | **மத்தியபிரதேசம்** |
| | 1. திரு. அற்புதராஜ் மார்காஷிஸ் | 10. வட்டா சபை |
| | 2. திரு. ராஜமாணிக்கம் | 11. தலயா சபை |
| | 3. திருமதி. பாப்பா 4. திருமதி. டெய்சி | |
| **4.** | **சகோ. ஸ்டீபன் (ஷாலோம்)** | **குஜராத்** |
| | 1. சகோ. பிரின்ஸ் | 12. போர்கேடா சபை |
| | 2. திருமதி. செல்வி பிரின்ஸ் | 13. கங்கேலா சபை |
| | 3. திருமதி. ஜெயா | |
| | 4. Mas. சஞ்சய் 5. Mas. சூஜின் | |
| **5.** | **சகோ. டேனியல் (ஷாலோம்)** | **குஜராத்** |
| | 1. திரு. தங்கராஜ் | 14. பாட்டன்பூரா சபை |
| | 2. திருமதி. ஜேசம்மாள் | 15. தேவ்கட் சபை |
| | 3. திருமதி. பொன்மணி | 16. சன்னடா சபை |
| **6.** | **சகோ. கேரட் (ஷாலோம்)** | **இராஜஸ்தான்** |
| | 1. திரு. ஸ்டீபன் ஜெயபால் | 17. காட்டா திருச்சபை பிரதிஷ்டை |
| | 2. திருமதி. பொன் விஜயா | 18. பேடவ் சபை |
| | 3. மாஸ்டர். சாம் | 19. சிமளியா சபை |

பணித்தளங்களை பார்வையிட்டு இரவில் அனைவரும் உணவருந்தியபின்பு இரவு 9மணி முதல் இரவு 12.30 மணி வரை தேவனைத் துதித்து பாடி நன்றி கூறினோம். ஒவ்வொரு குழுவாகவும், தனிப்பட்ட வகையில் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை பகிர்ந்து ஷாலோம் ஊழியங்களுக்காக, பீல் மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபித்தோம். அதன்பின்பு உடைமகளை ஆயத்தப்படுத்தி 01.10.2012 அதிகாலை 3.30 மணி அளவில் தாகோத்திலிருந்து புறப்பட்டு தூத்துக்குடிக்கு சுகத்துடன் வந்தடைந்தோம். நிச்சயமாகவே தேவன் நம் தேசத்தை நம் தலைமுறையில் சந்தித்து வருகிறார் என்ற மனநிறைவுடன் தேவனை துதித்தோம். தேவனுக்கே மகிமை!

## பணித்தளத்தை பார்வையிட்டவர்களின் அனுபவ சாட்சிகள் :

### திரு. தங்கராஜ் அவர்கள்

பாட்டான்புரா ஒரு பெரிய திருச்சபை. ஆராதனை நடந்து கொண்டிருந்தது. ஆலய மக்கள் மிக உற்சாகமாய் முன்பாக வந்து வரவேற்றார்கள். மக்கள் இருசக்கர வாகனம், ஆட்டோ மற்றும் நடந்து உற்சாகமாய் வருவதை பார்த்தோம். நாங்கள் 3 ஆலயங்களை பார்த்தோம். குறிப்பாக எங்கள் குடும்பத்தின் சார்பில் தேவ்கட் கிராமத்தில் கட்டிக்கொடுத்த ஆலய ஆராதனையில் பங்குபெற்று, தேவனுடைய வார்த்தை பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை தந்தார். மேலும் எங்கள் குடும்பத்தின் சார்பில் ஜெபித்து தாங்கப்படும் பீல் சுதேச ஊழியர் சஞ்சய் ராட்டுவா குடும்பத்தைக் சந்தித்து, ஜெபித்து உற்சாகப்படுத்தினோம். பொதுவாக, இவர்களுடைய அன்பு, வரவேற்பு முழுமையான ஆவியில் நிறைந்த ஆராதனை மற்றும் மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதமான சாட்சிகள் ஆகியவை எங்களுக்கு அதிகமான உற்சாகத்தைக் கொடுத்தது. பிசாசுகள் அலைக்கழிக்கப்பட்டு, விலகி ஓடுகிறதை கண்டோம். இன்றும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் பெரிய அற்புத அடையாளங்களைச் செய்து வருகிறார் என்பதைக் கண்ணாறக் கண்டோம்.

### திரு. கிங்ஸ்லி அவர்கள்

நாங்கள் சென்ற எல்லா பணித்தளங்களிலும் ஆலயம் இடம் கொள்ளா அளவுக்கு மக்கள் திரளாய் கூடியிருந்தார்கள். விசுவாசிகள் தேவனை உற்சாகமாய் பாடி, ஆடி துதிப்பது விசேஷமாய் இருந்தது. அப்படியே தேவ மகிமை இறங்கி இருப்பதை நாங்கள் காண முடிந்தது. பிசாசுகள் ஆடி, அலறி அப்படியே ஓடிவிடுவதை கண்களால் கண்டோம். இதையெல்லாம் பார்க்கும்போது நம்முடைய விசுவாசம் எல்லாம் தூசி. அவர்களுடைய விசுவாசத்தைப் போல நம்முடைய சபைகளில் விசுவாசம் இல்லை. நாம் மணி கணக்கு பார்க்கிறோம். பிரசங்கம் 5,10,15 நிமிடங்களில் முடிந்து விடாதா? சீக்கிரம் வீடு போக வேண்டும் என்று கணக்கு பார்க்கிறோம். ஆனால் இந்த மக்கள் 9 மணியிலிருந்து 5 மணி வரைக்கும் சோர்ந்து போகாமல் அப்படியே உற்சாகமாய் துதித்துக் கொண்டேயிருக்கிறார்கள். அதில் பாதியாவது நாம் செய்ய வேண்டும். அதற்கான நாம் முயற்சி செய்ய வேண்டும்.

**திருமதி. ஜெபசீலி கிங்ஸ்லி அவர்கள்**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இந்த மக்களின் ஈடுபாடுகள் எல்லாம் என்னை அதிகமாய் கவர்ந்தது. சொல்லப்போனால் அவர்கள் அதிகமாய் படிப்பறிவு இல்லாதவர்கள், ஆனாலும் கூட கர்த்தரை அறிந்து, இயேசுவை ஏற்றுக்கொண்டு, உற்சாகமாய் ஆலயத்திற்கு வருவது, உற்சாகமாய் காணிக்கை கொடுப்பது எல்லாமே முழு உள்ளத்தோடு செய்கிறதை காண முடிந்தது. கடைசிவரை உற்சாகமாய் அமர்ந்திருந்தார்கள். இந்த மக்கள் Very innocent. போட்டி பொறாமை இல்லை. தேவனை அதிகமாய் நேசிக்கிறார்கள்.

**திரு. இராஜமாணிக்கம் அவர்கள்**

ஷாலோம் ஊழியத்திற்காக அநேக வருடமாய் ஜெபித்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது இவைகளையெல்லாம் கண்கூடாக காண தேவன் கிருபை செய்தார். பணித்தளத்திற்கு நிறைய சந்திக்கப்பட வேண்டிய தேவைகள் இருப்பதாக நான் உணர்ந்தேன். கர்த்தர் தாமே இந்த பணித்தளங்கள் பெருகவும், ஊழியம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிக்கிறேன்.

**திருமதி. ஜேசம்மாள் அவர்கள்**

கானான் தேசத்தை போல, இந்த இடத்தை தரிசனத்தில் காண்பித்து, வாக்குபண்ணி, பேராயர் தேவதாஸ் குடும்பத்தை கொண்டு வந்து, இத்தனை சபைகளை உருவாக்கி நடத்தும்படியாய் கொடுத்த கிருபைக்காய் தேவனுக்கே கோடா கோடி ஸ்தோத்திரம்.

ஒவ்வொரு சபையிலும் ஆராதிப்பது மிக விசேஷம். குட்டி பரலோகம் இறங்கினதுபோல ஆராதிக்கிறார்கள். எங்களுக்கு மிகுந்த சந்தோஷம். எங்களை அவர்கள் ஆண்டவருடைய சாயலாகவே பார்த்தார்கள். நாங்கள் தேவசாயலை தரித்திருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். நிச்சயம் பரலோகராஜ்யம் இறங்கி வந்திருக்கிறதை கண்டு தேவனை துதித்தோம்.

ஸ்திரீயானவள் பாலகனை பெற்றெடுக்க எப்படி கர்ப்பவேதனைபடுகிறார்கள். அதுபோல 650 சபைகளை பெற்றெடுக்க எவ்வளவு கர்ப்ப வேதனை (கஷ்டம், வேதனை, ஆத்தும தாகம்) அடைந்திருப்பார்கள் என்பதை உணர்ந்து அதிகமாய் நன்றிபலியை தேவனுக்கு செலுத்தினோம். தேவன் இவர்களை முன்குறித்திருக்கிறார். சகோதரரும், சகோதரியும் பாஷை தெரியாதவர்கள் மத்தியிலும் அன்போடு பேசி முகம் கோணாமல் உரையாடி ஆண்டவரை பற்றி எடுத்து சொல்லியிருப்பதை நினைக்கும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. நாங்கள் இங்கு வந்து பெரிய சந்தோஷத்தை கண்டோம் என்று தேவனை மகிமைப்படுத்தினோம்.

**திருமதி. பொன்மணி அவர்கள்**

மலைகளும், குன்றுகளும் மேடுபள்ளங்களும் நிறைந்த பகுதி. இந்த மக்கள் கர்த்தர் மீது அன்பு கொண்டு உற்சாகமாய் காணிக்கை கொடுக்கிறார்கள். 10 ரூபாய்க்கு குறைந்து யாருமே காணிக்கை போடவில்லை. எவ்வளவு அருமையாய் காணிக்கை போட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

**திருமதி. பாப்பா அவர்கள்**

நாங்கள் சென்ற வட்டா (மத்தியபிரதேசம்) கிராம ஆலயத்திற்கு ஜீப்பை விட்டு இறங்கி 1 கி.மீ சோளகாட்டில் நடந்தோம். பயமாக இருந்தது. நடந்துசென்று ஆலயத்திற்கு போய் பார்த்தால் ஆலயம் நிரம்பி வழியும்படியாய் மக்கள் நெருக்கமாய் இருந்ததினால் மிகுந்த வியர்வை, மூச்சு முட்டுகிற மாதிரி இருந்தது. ஆனாலும் மிக அழகாக, நன்றாக பாடி, நடனம் ஆடுகிறார்கள். நாங்கள் அந்த மக்களுக்கு அல்லேலூயா இயேசு என்ற தமிழ்ப் பாடலை கற்றுக் கொடுத்தோம். அதையும் உடனே பாட ஆரம்பித்துவிட்டார்கள்.

''அல்லேலூயா'' என்று சொன்னால் உடனே பயங்கர சத்தமாய் சொல்லுகிறார்கள். ஆனால் நாம் நம் பகுதியில் அல்லேூயா சொல்லச் சொன்னால் கூட சொல்லமாட்டோம். எழும்புங்கள் என்று சொன்னால் உடனே இடிச்சி, பிடிச்சி சீக்கிரமாய் எழும்புகிறார்கள். ஆனாலும் வரிசையை விட்டு கலையாமல் எழும்புகிறார்கள். நாமெல்லாம் அப்படி சீக்கிரமாய் எழும்பினால் இந்த வரிசையை விட்டு அடுத்த வரிசைக்கு போய் விடுவோம்.

பிரசங்கம் முடிந்தபின்பு, அனைத்து விசுவாசிகளும் ஜெபிக்க வேண்டிக் கொண்டார்கள். நானும் சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் மற்றும் சகோதரி டெய்சி ஆகிய 3 பேரும் அந்த மக்களுக்காக தலையில் கைவைத்து ஜெபித்தோம். அப்பொழுது ஒரு வாலிபப்பிள்ளை மிகவும் அழுதாள். அவள் அழுத உடனே எனக்கும் அழுகை வந்துவிட்டது. பாஷை தெரியாததினால் என்ன? எதற்கு அழுகிறாள்? என்று கேட்கவும் முடியவில்லை. ஆனால் நானும் அழுதேன். சிறிதுநேரத்தில் அவள் அமைதியாகிவிட்டாள். அப்பொழுது தேவன் என் ஜெபத்தை ஏற்றுக்கொண்டார் என்று நினைத்து மறுபடியும் ஜெபித்தேன். இந்த ஆதிவாசி மக்கள் மத்தியில் வந்து இலட்சக்கணக்கான மக்களை ஆதாயப்படுத்துவது என்றால் ஊழியக்காரருடைய கடினமாக உழைப்பு மற்றும் ஆண்டவருடைய கிருபையே. பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் இருந்து, இந்த ஊழியத்திற்காக நாங்கள் உங்கள் பின்னாலே இருந்து மோசேயின் கையை ஆரோனும், ஊரும் உயர்த்தியதுபோல நாங்களும் ஜெபித்துத் தாங்குவோம்.

**திருமதி. டெய்சி அவர்கள்**


ஆலயம் எப்படியிருக்கும்? இங்குள்ள ஊழியம் எப்படி? என்று பார்க்க வேண்டும் என்று ஆசை. நாங்கள் போகும்முன்பே ஆலயம் நிரம்பி வழிந்தது. இந்த மக்களுக்கு ஞாயிற்றுக் கிழமை ஆலயம் போக வேண்டும் என்ற வாஞ்சை இருக்கிறது. மிக நெருக்கமாய் உட்கார்ந்து இருந்தாலும், அமைதியாக, ஒற்றுமையாய், சிரித்த முகமாய் இருக்கிறார்கள் (நாம் யாராவது பக்கத்தில் இருந்தால் உடனே தள்ளி இரு என்போம்.) யாருக்குமே கவலை இல்லை. சந்தோஷமாய் இருந்தார்கள். நன்றாக கைதட்டி உற்சாகமாய்ப் பாடுகிறார்கள். நாம் துதி ஆராதனை என்றால் வாயை திறந்து துதிக்க வெட்கப்படுவோம். ஆனால் இங்கே சின்ன பிள்ளையிலிருந்து பெரிய ஆள்வரைக்கும் எல்லாருமே கைதட்டிப் பாடுகிறார்கள். நாமும் அவர்களைபோல கைதட்டி தேவனை ஆராதிக்க வேண்டும், ஞாயிறு ஆலயத்திற்கு செல்ல வேண்டும்.

தொடர்ச்சி 19ம் பக்கம்....

## CSI. கால்டுவெல் நினைவு ஆலயம் (தூத்துக்குடி) சபையாரின் பணித்தள வருகை - 29&30 செப்.2012



தோரண்யா (ம.பி.) கிராம சபை விசுவாசிகளுடன்



தோரண்யா (ம.பி.) கிராம ஆலய பிரதிஷ்டை



காட்டா (இராஜ) கிராம சபை விசுவாசிகளுடன்



காட்டா (இராஜ) கிராம ஆலய பிரதிஷ்டை

# CSI. கால்டுவெல் நினைவு ஆலயம் (தூத்துக்குடி) சபையாரின் பணித்தள வருகை - 29&30 செப்.2012



குஜராத், கொலானா கிராம ஆலய ஆராதனை



குஜராத், ஹிரோலா கிராம ஆலயம்



இராஜஸ்தான், ஊழியர் கூடுகையில் தேவ செய்தியளிக்கும் Rev. சாமுவேல் செல்வராஜ் அவர்கள்



இராஜஸ்தான், ஷாலோம் சுதேச ஊழியர்கள் கூடுகை



குஜராத், போர்கேடா கிராம ஆலயம்



குஜராத், கங்கேலா சபை – செய்திவேளை



இராஜஸ்தான், பிஜல்பூர் ஊழியர் கூடுகையில் வரவேற்பு



மத்தியப்பிரதேசம், குவாலி கிராம ஆலயம்



குஜராத், பாட்டன்புரா கிராம ஆலயத்தில் வரவேற்பு



குஜராத், தேவ்கட் (சோட்டா உதய்பூர்) கிராம ஆலய விசுவாசிகளுடன்



மத்தியப்பிரதேசம், வட்டா சபை மக்கள்



மத்தியப்பிரதேசம், தலையா கிராம ஆலய விசுவாசிகளுடன்



இராஜஸ்தான், கும்புரா கிராம ஆலயத்தில் வாழ்த்துரை



இராஜஸ்தான், பேடவ் கிராம ஆலயம்



மத்தியப்பிரதேசம், காளாகேத் கிராம ஆலயம்



மத்தியப்பிரதேசம், பத்ரா சபை விசாவாசிகளுடன்

# CSI. கால்டுவெல் நினைவு ஆலயம் (தூத்துக்குடி) சபையாரின் பணித்தள வருகை - 29&30 செப்.2012



20 பேர் கொண்ட குழுவுடன் பிஷப் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்



மத்தியப்பிரதேசம், அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் செய்திவேளை Rev. சாமுவேல் செல்வராஜ் அவர்களின் மனைவி



மத்தியப்பிரதேசம், அந்தர்வேலியா கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு



மத்தியப்பிரதேசம் முண்டத் கிராம ஆலய செய்திவேளை



மத்தியப்பிரதேசம், தேத்லா கிராம ஆலய விசுவாசிகளுடன்

**திருமதி. செல்வி பிரின்ஸ் அவர்கள்**

இது ஒரு Practical Experience தான். மிஷனெரி என்றால் நல்லா work பண்ணுவாங்க. Sufferings இருக்கும். நாம் போய் என்ன பார்ப்போம் என்று ரொம்ப யோசித்துக் கொண்டேதான் இருந்தேன். இங்கு வந்த பின்புதான், எவ்வளவு Suffer பண்ணியிருப்பாங்க என்று நேரடியாக பார்க்கும்போதுதான் எவ்வளவு கஷ்டபடுகிறார்கள் என்று தெரிகிறது. இதனை இந்த 2 நாட்களில் பார்க்க தேவன் கிருபை செய்தார். ரொம்ப பாராட்டப்பட வேண்டியது என்றால் 2 மணி நேரம், 3 மணிநேரம் தாமதமாக சென்றாலும் அப்படியே காத்திருக்கிறார்கள். நாம் கைதட்டிப் பாடல் பாட வேண்டும் என்றால் வெட்கப்பட்டுக் கொண்டே இருப்போம். ஆனால் அவர்கள் கைகளை தட்டி மிக உற்சாகமாய் பாடுகிறார்கள். திரு. பிரின்ஸ் அவர்கள் ஆங்கிலத்தில் செய்தி கொடுத்தார்கள். வாயை திறந்து தேவைகளை தேவனிடம் கேளுங்கள் என்று சொன்னவுடனே ஆலயத்தில் இருந்த முழு அங்கத்தினர்களும் கண்ணீர் விட்டு அழுவதை நான் கண்கூடாகக் கண்டேன்.

தேவஆவியானவருடைய பிரசன்னம் அங்கு இருந்ததை காண முடிந்தது. எல்லாருமே சத்தமிட்டு அழுதார்கள். முடிந்தஉடன் தலைமேல் கைவைத்து ஜெபிக்க சொன்னார்கள். முதலில் பயமாக இருந்தது. அவர்கள் கைகள் shake ஆகியதை பார்க்கும்போது பயம்தான், ஆனாலும் கொஞ்சநேரம் ஜெபித்தோம். முழு அங்கத்தினர்களும் ஜெபித்துவிட்டுத்தான் சென்றார்கள். Really great thing!

**திருமதி. ஜெயா அவர்கள்**

நான் போர்கேடா ஆலயத்தில் என்னுடைய சாட்சியை பகிர்ந்துக் கொண்டேன். நான் அங்கு கண்டது, ஒரு பெண்ணை பார்தேன். அவர் கணவர் ஒரு விபத்தில் இறந்துவிட்டார். இவருக்கு ஒரு பிள்ளை. அந்த பெண்ணுக்கும் விபத்தில் காலில் அடிபட்டு எலும்பு உடைந்து நடக்கவே முடியவில்லை. அந்த சூழ்நிலையிலும் அவர்கள் ஆண்டவரை தேடி ஆலயத்திற்கு வந்தது ஆச்சரியமாக இருந்தது. இவர்கள் தேவனை விட்டு பின்வாங்கி போகவே மாட்டார்கள் என்று அறிய முடிந்தது.

**சகோதரி. ஹெப்சி அவர்கள்**

இந்த இடங்களையெல்லாம் பார்க்கவேண்டுமென்று அடிக்கடி ஜெபம் பண்ணுவேன். இந்த இடங்களை பார்க்க சிலாக்கியம் தந்ததற்கு ஆண்டவரைத் துதிக்கிறேன்.அந்தர்வேலியாவில் மக்களால் ஆலயம் நிரம்பியிருந்தது. மட்டுமல்ல ஒரு பெண் ஆராதனை நடத்துகிற சத்தம் கேட்டது. என்னடா என்று நினைத்தேன். ஒருவேளை பாஸ்டர் நம்மை வரவேற்பதற்காக வெளியே இருக்கிறார் என்று நினைத்தேன். உள்ளே சென்று பார்த்தால் ஆராதனை நடத்துவது அந்த ஆலயத்தின் பாஸ்டர் அம்மா. மிக அருமையாக பாடல் பாடி, ஆடி ஆராதனையை நடத்திக் கொண்டு இருந்தார்கள்.

வஹிதா அக்காவும் ஆடி, பாடி ஆராதனை நடத்தினார்கள். நானே நடுங்கிப்போய் அதை பார்த்து உண்மையிலேயே என்னையே அறியாமலேயே ஆட ஆரம்பித்துவிட்டேன். தாவீது சங்கீதக்காரனைப் போல ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கிற ஆவியானவரின் பிரசன்னம்

உணர்ந்தேன். நிறைய நேரம் நாம் கையை உயர்த்த, கரம் தட்ட, கொஞ்சம் அசையக் கூட வெட்கப்படுவோம். ஒரு பேராயர் அம்மாவாக இருந்து வஹிதா அக்கா உற்சாகமாய் ஆடுகிறார்களே என்று எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அப்பொழுது ஆத்துமபாரம் வந்தது.

**திருமதி. பொன்விஜயா அவர்கள்**

முதலாவது இராஜஸ்தானில் பேடவ் பணித்தளத்திற்கு சென்றோம். அங்கு போதகர் பாதர் டோடியார் பாடல் ஆராதனை நடத்தினார்கள். ஆவி உற்சாகமுள்ளது என்பது உண்மை என்று அந்த சபையினரை பார்த்துக் கண்டு கொள்ளமுடிந்தது. அவ்வளவு உற்சாகமாய் பாடல்களை பாடி ஆடி தேவனைத் துதித்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து காட்டாவில் ஆலய பிரதிஷ்டை செய்ய சென்றோம். நாங்கள் போகும் வரை ஜனங்கள் பாடல்களை பாடிக்கொண்டே இருந்தார்கள். அந்த ஆலய விசுவாசிகள் 11 மணியிலிருந்து சோர்ந்து போகாமல் உற்சாகத்தோடு பாடல் படித்துக் கொண்டே இருந்தார்கள். பின்பு பிரதிஷ்டை செய்தோம். அதன்பின் எங்களை அவர்கள் கலாச்சாரத்தின்படி வரவேற்றார்கள். ஜெயபால் சார் நமது ஆலயம் எப்படியிருக்கவேண்டும் என்று பிரசங்கித்தார்கள். அதன்பின் ஆராதனை நிறைவுற்றது. அப்போது ஒரு அம்மாவைப் பற்றி சாட்சி சொன்னாங்க. அந்த அம்மாவால் நடக்கவே முடியாது, பின்பு இயேசுவிடம் வந்தபோது தேவன் சுகம் கொடுத்தார். இப்போது நன்றாக நடக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அம்மாவும எங்கள் முன்னால் நடந்து காண்பித்தார்கள். எங்களுக்கு ஒரே ஆச்சரியம். நிச்சயமாக இயேசு இன்றும் அற்புதம் செய்கிறார்.

**திருமதி. சரோஜா சாமுவேல் அவர்கள்**

அந்தர்வேலியாவில் ஆலயம் நிரம்பி வழிய மக்கள் அமர்ந்திருந்தார்கள். கொஞ்சம்கூட களைப்பே இல்லாமல் ஆரவாரித்து, பாடி கொண்டிருந்தார்கள். "ஈசு ஜிந்தா ஹே" என்ற பாடலை மிகவும் அருமையாய் பாடி துதித்தார்கள். மட்டுமல்ல செய்தி கொடுக்கும்போது கூட, மக்கள் அக்கம் பக்கம் பார்க்காமல் தேவனுடைய வசனத்தைக் கேட்டார்கள். அந்த சபையில் பாஸ்டர் ஊரில் இல்லாத சமயத்தில் பாஸ்டர் அம்மா அழகாக ஆராதனையை நடத்துகிறார்கள். இங்கு நம் சபையின் மூலம் தாங்கி வரும் சுதேச ஊழியர் **சகோ. ஹேம்சந்த் குண்டியா** அவர்களை சந்தித்து, ஜெபித்து, அன்பளிப்புகளை வழங்கி உற்சாகப்படுத்தினோம். அந்த கிராமத்தை விட்டு சந்தோஷமாக அடுத்த பணித்தளத்திற்கு சென்றோம்.

நம்ம ஊரில் 11 மணிக்கு ஆலயம் முடியவில்லையென்றால் எழும்பி போய்கொண்டே இருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் நோக்கம் எல்லாம் வீட்டில்தான் இருக்கும். குருவானவர் செய்தி சரியானநேரத்தில் முடிக்கவில்லையென்றால் முறுமுறுப்பார்கள். இங்கு பீல் மக்கள் காலையில் வந்து இருந்தார்கள். அவர்கள் சாப்பிடாமலும், குழந்தை அழுதாலும் அப்படி இருந்து தேவனை ஆராதிக்கிறதைப் பார்த்தால் நாம் அதில் கால் பங்கு கூட கிடையாது. இரண்டு நாட்களும் ஷாலோம் பணித்தளத்தை பார்த்தோம். எல்லாப் பணித்தளங்களும் ஒரே மாதிரியாக செயல்பட்டது. எதுவுமே எதிலும் குறைவுபட்டது என்று சொல்லமுடியாது. ஆராதனையில் தொய்வே இல்லை. காரணம் பேராயர் மற்றும் அம்மா அவ்வளவு உற்சாகமாய் பணித்தளங்களை நடத்தி கொண்டிருக்கிறார்கள். இந்த ஷாலோம் திருமண்டலம் 2015ம் ஆண்டுக்குள் மூன்று

திருமண்டலங்களாக உருவேற்கப்படுவதாக கூறினார்கள். அப்படி இந்த ஷாலோம் திருமண்டலம் வளர்ந்து பெருகவும், பேராயர், அம்மா குடும்பத்தினர் மற்றும் ஊழியர்கள் செய்யும் பணிகளும் வளர்ந்து பெருக ஜெபிக்கிறேன்.

**திரு. ஜெயபால் அவர்கள் (சபை உபதேசியார்)**

நாங்கள் காலை 9.00 மணிக்கு ராஜஸ்தான் கிளம்பி சென்றோம். எங்களுடன் சகோ. கேரட் வந்தார்கள். 11 மணிக்கு பேடவ் பணித்தளத்திற்கு சென்றடைந்தோம். வழியில் ஆறு இருந்ததினால் கொஞ்ச தூரத்தில் வண்டி நின்று விட்டது. மேடும் பள்ளமுமாய் இருந்த இடத்தில் நாங்கள் நடந்து ஆலயத்திற்கு சென்றோம். நடக்கும் பாதையில் 1/2 கி.மீ தூரத்திலேயே அவர்கள் பாடல் சத்தம் தொனித்தது. நன்றாக உற்சாகமாக பாடல்களைப் பாடி தேவனைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்.

பின்பு அங்கு முடித்துவிட்டு காட்டா பணித்தளத்திற்கு சென்றோம். அங்கு செல்வதற்கும் கிட்டத்தட்ட 2 கி.மீ நடக்க வேண்டியிருந்தது. இடுக்கமான பாதை வழியாய் கடந்து சென்றோம். அங்கும் ஜனங்கள் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். பின்பு அங்கு கூடியிருந்த அனைவரும் சிறுபிள்ளைகள் முதற்கொண்டு ஜெய் ஈசு என்று சொல்லி கைகொடுத்தார்கள். நான் செய்தியளித்தேன். செய்தியை அமைதியாக ஆவலாக அனைவரும் கேட்டார்கள். ஒரு சிறிய குண்டூசி விழுந்தால் கூட சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதியாக பயபக்தியோடே செய்தியைக் கேட்டார்கள்.

**திரு. பிரின்ஸ் அவர்கள்**

நாங்கள் முதலாவதாக போர்கேடா என்ற முதல் பணித்தளத்திற்கு சென்றோம். அங்கு ஆலயத்திற்கு மக்கள் சாரை சாரையாக வருகிறதை பார்த்தோம். உடனே நாங்கள் அவர்களை பற்றி கேட்கலாம் என்று யோசித்து ஒரு அம்மாவிடம் நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டோம், அவர்கள் 4 கி.மீ தூரத்திலிருந்து வருவதாக சொன்னார்கள். அவர்கள் சொன்ன பதில் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படி வர வர பலரிடம் விசாரித்தோம். அநேகர் பல கி.மீ தூரத்திலிருந்து வருவதாகவே சொன்னார்கள். அவர்கள் சொன்ன பதில் எங்களை உந்துவதாக இருந்தது. மொத்தத்தில் அந்த ஆலயத்திற்கு அருகிலுள்ள 20 கிராமத்திலிருந்து மக்கள் இங்கு வந்து தேவனை ஆராதிக்கிறார்கள். உற்சாகமாய் பாடல் பாடினார்கள். அவர்களோடு சேர்ந்து நாங்களும் ஆடிபாடினோம். எங்களது உற்சாகத்தை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆராதனைக்கு பிறகு பாஸ்டர் அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று நன்கு உபசரித்தார்கள். ஒரு நல்ல மறக்கமுடியாத அனுபவமாக இந்த போர்கேடா பணித்தளம் எங்களுக்கு அமைந்தது.

அதன்பிறகு கங்கேலா பணித்தளத்திற்கு சென்றோம். மலை குன்றுகள் வழியாய் ஒரு சோள காட்டின் வரை எங்கள் வாகனம் வந்தது. அங்கிருந்து சோளக்காட்டின் வழியே ஆலயத்திற்கு வெகு தூரம் நடந்து வந்தோம். அங்கு மக்கள் திரண்டு இருப்பதும், உற்சாகத்தின் ஆவியினால் இருப்பதை பார்த்து எங்களுக்கு அதிக உற்சாகமாய் இருந்தது. இதுவரை பார்த்த ஆலயங்களில் மிகப்பெரிய ஆலயம். ரொம்ப அருமையாய் கட்டியிருந்தார்கள். அழகாக வர்ணம் பூசியிருந்தாரகள். 400பேர் இருக்கக்கூடிய ஆலயம். அந்த சபையின் மூப்பர் நஹின்பாய் ஆராதனை நடத்திக் கொண்டிருந்தார்.

என் வாழ்க்கையிலே எனக்கு ஒரு புதிய அனுபவம். ஆங்கிலத்தில் பிரசங்கிக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதை குஜராத்தியில் மொழிபெயர்ப்பு செய்தார்கள். குறிப்பாக என்னுடைய தம்பியின் அனுபவ சாட்சியை கூறும்போது அந்தமக்கள் கண்ணீர்விட்டு உணர்ச்சியில் அப்படியே துடித்துக்கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது. ஒரு அம்மா கண்ணிலிருந்து கண்ணீராய் வந்து கொண்டிருந்தது என்று என் மனைவி கூறினாள். ஆனால் நான் உண்மையாய் சொல்லுகிறேன். என்ன நடந்தது என்று எனக்கே தெரியவில்லை. என்னை ஒரு கருவியாக தேவன் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை உணருகிறேன். அடுத்தது நான் ஜெபம் என்று சொன்ன உடனே அந்த கூரை இடிந்து விழாத குறைதான், அவ்வளவு தூரத்திற்கு சத்தம். அந்த காட்சியைப் பார்த்தபோது எனக்கு மிகுந்த ஆச்சரியம். 45 நிமிடத்திற்கு ஜெபம் நடந்தது. அநேக மக்கள் சுகம் பெற்றார்கள். என் வாழ்க்கையில் இப்படிப்பட்ட பிரசங்கமும் பண்ணவில்லை. தேவன் என்னையும் இப்படி பயன்படுத்துவாரா? என்று நினைத்தேன்.

உண்மையைச் சொல்லப் போனால் தேவன் பெரிய அற்புதங்களை பணித்தளங்களில் செய்து கொண்டிருக்கிறார். ஷாலோம் மூலமாக நடைபெறுகிறது. ஊழியமானது மிகவும் ஆணித்தரமாக நடைபெற்று கொண்டிருக்கிறதை நாங்கள் கண்கூடாக பார்க்கமுடிந்தது.

**திரு. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள்**

நானும் என் மனைவியும் 2006ம் ஆண்டு ஜுலை மாதம் ஷாலோம் பணித்தளத்திற்கு, சென்று வந்தோம். கடந்த 6 வருடங்களில் பணித்தளங்களில் ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்திருப்பதைக் காணமுடிந்தது. இங்கு ஊழியர்களுக்கு முறைப்படி பயிற்சி கொடுத்து வருகிறார்கள். ஆராதனை நடத்த, பாடல்பாடி துதிக்க, தேவ செய்தியைக் கூற, ஜெபிக்க என அனைத்தையும் அழகாகக் கற்றுத் தந்துள்ளனர். ஆவியானவரின் ஆபிஷேக அனுபவங்கள் ஊழியத்திற்கு அனுகூலமாக உள்ளது. அடிக்கடி ஊழியர் கூடுகை, பெண்கள் கூடுகை, ஊழியர் மனைவிமார் கூடுகை, மூப்பர் கூடுகை, என அநேக கூடுகைகள் நடத்துவதால் ஆண்கள், பெண்கள், ஊழியர்கள் நல்ல பயிற்சி பெற்றுள்ளனர். ஆலயங்கள் எல்லாம் நிரம்பி வழிகின்றன. மக்கள் அதிக உற்சாகத்துடன் பாடல் பாடி, ஆடி மகிழ்கின்றனர்.

நாங்கள் சென்று வந்த இடங்களெல்லாம், சரியான வாகன வசதி பெறாத இடங்களாகும். ஷலோம் ஊழியத்தின் ஆரம்ப கட்டத்தில் சகோ. தேவதாஸ் – சகோதரி வஹிதா தேவதாஸ் இருவரும், சைக்கிளில்தான் ஊழியத்திற்கு இந்தப் பாதைகளில் சென்றுள்ளனர். சகோதரி வஹிதா கர்ப்பவதியாக இருக்கும்போதும், மூன்று குழந்தைகளும் சிறுவர்களாய் இருக்கும்போதும் எப்படியாக கஷ்டப்பட்டு சைக்கிளில் சென்றிருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது, இவர்கள் இருவரின் தியாகமும், கடின உழைப்பும் ஷாலோம் ஊழியங்களை இவ்வளவாய் வளரச் செய்துள்ளதைக் காண முடிகிறது.

அனைத்த ஊழியர்களும் பிஷப் தேவதாஸ் அவர்களையும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களையும் அதிகமாக மதிக்கிறார்கள். ஏனெனில் இவர்கள் இருவரும் ஊழியர்களிடன் பற்றும் பாசமும் வைத்துள்ளார்கள். இவர்களுக்கு எந்த உதவியும் எந்த நேரத்திலும் செய்ய ஆயத்தமாகயிருக்கிறார்கள். நாங்கள் ஆலயங்களில் சென்று பார்க்கும்போது, மே மாதம் நடத்தப்பட்ட சிறுவர் விடுமுறை பள்ளியின் (CBC - VBS) Chart தொங்கிக் கொண்டிருப்பதைக்

காண முடிந்தது. CBC (Children Bible Class) –க்கான பாடல்கள், கதைகள், பாடங்கள் அடங்கிய புத்தகங்கள் அனைத்தையும் இவர்களே தயார் செய்து 30 ஆயிரம் பிள்ளைகளுக்கு கடந்த மே மாதத்தில் CBC நடத்தியுள்ளார்கள். இது எவ்வளவு பெரிய சாதனை. வருங்காலங்களில் எல்லா ஊழியங்களுக்கும் முன்னோடியாக ஷாலோம் ஊழியம் விளங்கும் என்று நான் நம்புகிறேன். பீல் இன மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் வாழும் பல ஜாதி மக்களுக்கும் பிஷப். தேவதாஸும் – சகோதரி வஹிதாவும் ஆசீர்வாதமாக விளங்க வேண்டும் என்று பிரார்த்தித்து அவர்களை வாழ்த்துகிறேன்.

பீல் ஆதிவாசி சிறுவர்கள் தங்கிப் படிக்க நல்ல விடுதிக் கட்டிடங்கள், பள்ளிக்கட்டிடங்கள் வேண்டும். பீல் விசுவாசிகள் தேவனை ஆராதிக்க ஆலயங்கள் பெருமளவில் கட்டப்பட வேண்டும். இதன் வளர்ச்சிக்கு ஏற்ற நமது பணித்தள அலுவலக கட்டடங்கள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். ஷாலோம் திருமண்டலங்கள் 3 அல்லது 4 விரைவில் உருவாக்கப்பட வேண்டும். இதற்கு எல்லாம் நிதி உதவி செய்யும், தியாக உள்ளங்களை ஆவியானவர் வெகுவாக திரளணியாக எழுப்ப வேண்டும், என்று பிரார்த்தித்து, நானும் என்னால் இயன்றவரை இந்த ஊழியத் தேவைகள் சந்திக்கப்பட உதவுவேன் என்று கூறி, கொடு அல்லது கொடுக்க வை என்ற அறைகூவலோடு நிறைவு செய்கிறேன்.

**Rev. P.S. சாமுவேல் செல்வராஜ் ஐயா அவர்கள்**

- ★ ஷாலோம் மிஷனெரி பணி முன்னோடியாக இருந்து செயல்பட்டு வருகிறது.
- ★ சுதேச ஊழியர்களுக்கு பேராயர் தேவதாஸ் மற்றும் அவர்கள் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களும் நேரடியாக பயிற்சியும், மாதந்தோறும் தொடர் ஊழியர் கூடுகை நடத்தி உற்சாகப்படுத்தி வலுவான சபைகளை உருவாக்கி வருகிறார்கள்.
- ★ இராஜஸ்தான் மாநில ஊழியர் கூடுகை ஒரு சவாலாக இருந்தது. சுமார் 70 கி.மீ தூரத்திலிருந்து வந்திருந்தாலும் நேரத்தை வீணடிக்காமல், ஒருவருடன் ஒருவர் வீண் காரியங்களை பேசாமல், தேவ செய்தியை மனதார கவனித்து அர்ப்பணித்து ஜெபிப்பது ஆச்சரியமானதாகும்.
- ★ ஆலயங்களில் அனைவரும் ஆராதிக்கிறார்கள். மட்டுமல்ல ஜெபிக்கிறார்கள். போதகர் அனைவரும் தலையில் கைவைத்து ஆசீர்வதிக்கும் மட்டும் காத்திருக்கிறார்கள். ஊழியர்கள், போதகர்கள் ஜெபத்தில் அவர்களின் விசுவாசத்தை காட்டுகிறது.
- ★ நம் பகுதியில் அருகில் உள்ள ஆலயத்திற்கே வரமுடியவில்லை. இந்த ஷாலோம் விசுவாசிகள் பல கி.மீ தூரம் நடந்து வருகிறார்கள். எழுதபடிக்க தெரியாதவர்கள் வேதத்தை அழகாக கைகளில் சுமந்து வருகிறார்கள்.
- ★ எழுத்தறிவு இல்லையெனினும் பாடல்களை மனப்பாடமாக உற்சாகத்துடன் பாடுவது ஆச்சரியமானது. ஜெபத்திற்கு வந்தவுடன் பெண்கள் முக்காடு இடுவது போற்றப்படத்தக்கது.
- ★ தேவனுடைய ஊழியர்களை உபசரிப்பது, கனப்படுத்துவது இவர்களுக்கு தேவன் கொடுத்த நல்ல சுபாவம். தலைப்பாகைகட்டி, மலர் மாலைகளையிட்டு உற்சாகமான வரவேற்பு, தண்ணீர், சுட்ட மக்காசோளம் மற்றும் உணவு வேளையில் மக்காசோள ரொட்டி, கோழி குழம்பு இவைகளை செய்வது மிக கஷ்டமாக இருந்தாலும் மனரம்மியமாக செய்வது சந்தோஷமான காரியம்.

★ திருச்சபை network வைத்து சபை ஊழியர்கள், விசுவாசி அங்கத்தினர் விவரங்கள், மூப்பர்கள் விவரங்கள், சபை விபரங்களையும் கிரமமாக வைத்து பின் தொடர் பணி செய்வது மிக பாராட்டத்தக்கது.

★ பேராயர் அவர்கள் குடும்பமாக அனைத்து ஊழிய பொறுப்புகளையும், பொறுப்பாளர்களையும் கவனம் செலுத்துவது சபை வளர்ச்சிக்கு காரணமாகும்.

★ பணித்தளத்தை பார்வையிட்டு ஊழியம் செய்ய வந்த நம் குழுவோடு பேராயர் குடும்பமாக இணைந்து ஊழியம் செய்ததை கண்டு தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

★ 2015க்குள் 1000 சபைகள் 1000 சுதேச ஊழியர்கள் உருவாக்கும் திட்டமும், 2020க்குள் முழு பீல் மக்கள் சந்திக்கப்பட்டு ஆயிர ஆயிர ஸ்தல சபைகள் Self supporting ஸ்திர சபைகளாக மாறும் என்ற தேவன் பீல் மக்கள் குறித்து கொடுத்த தரிசனம் நிச்சயம் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை.

★ ஷாலோம் ஊழியத்தில் 3 மாநிலங்களிலும் 23 பணித்தளங்களை பார்வையிட்டு எழுப்புதலை உணர்ந்தோம். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார் என்பதை எங்கள் கண்களினால் கண்டு அனுபவித்தோம்.

★ நாம் நம் குடும்பத்தார், நண்பர் மற்றும் திருச்சபைகளுக்கு ஷாலோம் பணிகளை அறிமுகப்படுத்துவது நமது கடமை. பேராயர் தேவதாஸ், அவர்கள் மனைவி திருமதி. வஹிதா தேவதாஸ் மற்றும் மகன் டைட்டஸ்–மெர்லின், இளையமகன் ஷாலோம் அனைவரும் தியாகத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். அவர்களுக்காக அனுதினமும் ஜெபிக்கவேண்டும். சபையாக, குடும்பமாக அதிகமாய் தாங்க முன்வருவோம்.

தேவனுக்கே மகிமை! தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

## *சகோ. திவாகர் - காருண்யா திருமணம் (26.09.2012)*



தேவனுக்கே மகிமை! ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து நமது பணித்தளத்தில் கடந்த 18 ஆண்டுகளுக்கும் மேலாக தேவனுடைய பணியினை குடும்பமாகச் செய்துவரும் **சகோ. சாமுவேல்** அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம். மேலும் தேவன் அவருக்கு இரண்டு பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார்.

அதில் அவரது மகன் சகோ. திவாகர் நமது ஷாலோம் ஊழியங்களில் சிறுவர் முன்னேற்றப் பணியில் ஊழியம் செய்துவருகிறார். **சகோ. திவாகர்** மற்றும் நமது ஷாலோம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தில் தேவனுடைய ஊழியத்தினை நிறைவேற்றி வந்த சகோதரி **காருண்யா** இவர்களது திருமணம் ஆராதனை கடந்த **26.09.2012** தூத்துக்குடி சீயோன் தேவ சபையில் நடைபெற தேவன் கிருபை செய்தார்.

மேலும் மணமக்கள் **சகோ. திவாகர் – காருண்யா** இருவரும் ஷாலோம் பணித்தளங்களில் தேவனுடைய ஊழியங்களை நிறைவேற்றும்படியாக அர்ப்பணித்துள்ளனர். மணவாழ்வில் புதிதாய் இணைந்த மணமக்களையும் அவர்கள் ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதிக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

NúLô. ©úWm Ï Uôo Utßm NúLôR¬WgN² ©úWm Ï Uôo
IOB வங்கி மேலாளர்

## அவர்களின் பணித்தள அனுபவங்கள்

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், இரக்கங்களினாலும் நாங்கள் இருவரும் கடந்த 15.09.2012 அன்று, நமது ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடும்படியாக கடந்து சென்றோம். நாங்கள் இங்கு கண்ட அனுபவங்கள் மறக்க முடியாதவைகளாகும். அவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

15ம் தேதி இரவு குஜராத்தின் தலைநகரான அகமதாபாத் சென்றடைந்தோம். அங்கிருந்து 5 மணி நேரம் பிரயாணப்பட்டு நமது பணித்தள அலுவலகம் இருக்கும் தாகோத் என்ற ஊரை அடைந்தோம். இது இரண்டு ராஜாக்களின் கீழ் இருந்த இடம் ஆகையால் தோ (இரண்டு) காத் என்று இருந்தது இன்று மருவி தாகோத் என்றாகிவிட்டது என்றார்கள். நாங்கள் சென்ற பாதை கன மழையின் நிமித்தமாக சேதமாகியிருந்தாலும், கர்த்தர் எங்களைப் பத்திரமாகக் கொண்டு சேர்த்தார்.

16ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பரபரப்பாகிவிட்டது. சீக்கிரமாக தயாராகிவிடுங்கள் என்ற அன்பு கட்டளையிட்டனர். **பிஷப் தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** இருவரும் சேர்ந்து 23 ஆண்டுகளாக ஊழியம் செய்கின்ற அலுவலகத்தை பார்வையிட்டு உடனடியாக புறப்பட்டோம். காலையிலிருந்து இரவு வரை நிகழ்ச்சிகள் இருப்பதால், **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் வழிக்குத் தேவையான அனைத்தையும், ஆயத்தப்படுத்தியிருந்தார்கள். (குறிப்பாக சுக்கு காபி, தண்ணீர், சாப்பாடு, சுட்ட மக்கா சோளம் போன்றவை). எங்களோடு வந்த சகோதரர்கள் கீ–போர்ட், ஆடியோ சிஸ்டம் போன்றவற்றை கொண்டு வந்தனர். பிஷப் அவர்கள் காலம் பற்றாக்குறை காரணமாக, உணவிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எங்களோடு கிளம்பினார்கள். நாங்கள் இரண்டு குழுவாக பிரிந்து, பிஷப் அவர்களோடு நாங்களும், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் ஒரு குழுவோடும் பிரிந்து பணித்தளத்திற்குள் சென்றோம். இறுதியாக நாங்கள் அனைவரும் ஒரே இடத்தில் சந்திப்பதாக திட்டம்.

முதலாவதாக குஜராத், தான்பூர் தாலுகாவில் முதலாவதாகக கட்டப்பட்ட பாட்டன்பூரா என்ற கிராம ஆலயம். இது போகின்ற வழியில் அங்கு ஞாயிறு சந்தை நடந்து கொண்டிருந்தது. பீல் ஆதிவாசி ஜனங்கள் தங்கள் பொருட்களைக் கொண்டு வந்து விற்று தங்களுக்குத் தேவையானவற்றை அங்கே வாங்கிக் கொள்வார்கள். மேலும் வில் அம்புகள் விற்கும் அநேகரை அங்கு காண முடிந்தது.

செம்படம்பர் மாதம் ஆகையால் எங்கும் பச்சை பசேல் என்று விவசாய நிலங்கள். சோளம், துவரை, உளுந்து, காய்கறிகள் என அனைத்தும் விளைந்திருந்தன. இவற்றைப் பார்த்ததும், லாரி ஸ்ட்ரைக், டீசல் விலையேற்றம் போன்ற காரியங்கள் இவர்களைப் பாதிக்காது என எங்களது மனத்திரையில் ஓடியது. அந்த ஆலய ஆராதனை ஒலி எங்கள் காதுகளில் இனிமையாக வந்து ஒலித்தது. ஹிந்திப் பாடல்களை விசுவாசிகள் அனைவரும் இணைந்து ஒன்று போல பாடுகின்றனர். நாம் இன்று ஒரு பாடலைப் பாடி நாளை மறந்துவிடுகிறோம். ஆனால் அங்கு

அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாவிட்டாலும், டிஸ்பிளே கீ போர்டு இல்லாமல் மனப்பாடமாக பாடல்களை பாடுவது ஆச்சரியமாக இருந்தது. எங்களைப் பார்த்ததும் மிகவும் சந்தோஷப்பட்டு, உற்சாகத்துடன் வரவேற்றார்கள். பிஷப் அவர்கள் செய்தியை கவனமாகக் கேட்டு, ஏற்றுக் கொள்கிறார்கள். ஜனங்களின் மத்தியில் ஐக்கியத்தைக் காணமுடிந்தது. தேவ பிரசன்னம் அளவில்லாமல் இருந்ததை உணரமுடிந்தது.

இன்னொரு இடத்திற்குப் போகவேண்டியிருந்ததால் அங்கிருந்து உடனடியாக புறப்பட்டோம். அங்கிருந்த பாஸ்டர் அம்மா 15வருடமாக பெரும்பாடுள்ள ஸ்திரி. அவருக்கு ஆண்டவர் அற்புத சுகத்தைக் கொடுத்துள்ளார். ஆகவே மிகவும் வைராக்கியத்துடன் இருப்பதைக் காணமுடிந்தது.

அடுத்ததாக மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள அலிராஜ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சூழியா என்ற கிராம ஆலயம். மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த ஒரு கிராமம் இது. என்ன ஒரு செழிப்பு! கர்த்தர் அவர்களை நிச்சயமாகவே ஆசீர்வதித்திருக்கிறார். மேயின் ரோட்டில் வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே சில கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றோம். எங்களோடு வந்த சகோதரர்கள் கீபோர்டு போன்ற கருவிகளை சுமந்து கொண்டே நடந்து வந்தனர். மெயின் ரோட்டில் இருக்கும் போது விசுவாசிகளின் பாடல் சத்தம் எங்கள் காதுகளை வந்தெட்டியது. அன்று அந்த கிராம ஆலயம் புதிதாக கட்டப்பட்டு பிரதிஷ்டைக்கு தயாராக இருந்தபடியால், மதிய உணவு அங்கே ஆயத்தம் செய்திருந்தார்கள். அந்த ஆலய போதகர் **சகோ. வல்சிங் சோரியா** மற்றும் அவரது மனைவி **சகோதரி ராமாபாய்** இருவரும் இணைந்து தங்கள் விவசாய நிலத்தில் ஒரு பாகத்தை ஆண்டவருக்கு ஆலயம் கட்டும்படியாக கொடுத்த இடத்தில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. 30 ஆயிரம் ரூபாயினைக் கொண்டு இந்த ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தோம். மக்களின் உதவியினாலும், ஷாலோம் ஸ்தாபனத்தின் உதவியினாலும் இன்று ரூ. 3 இலட்சங்கள் செலவில் இதைக் கட்டியுள்ளோம் என்று மகிழ்ச்சி பொங்க கூறினார். இதற்காக அநேக நாட்கள் உபவாசித்து இந்த ஆலயத்தினை பெற்றிருக்கிறார்கள்.

**ஆலயத்தினை பிரதிஷ்டை செய்து** உள்ளே சென்றதுமே அப்படியொரு தேவ பிரசன்னம் நம்மை ஆட்கொண்டது. ஆலயம் முழுவதும் நிரம்பி வழிந்தது. **"ஜெய் ஈசு"** என்று ஆண்டவரை போற்றியும், **"நன்றி இயேசு"** – என்பதை ஹிந்தியில் **"தன்யவாத் ஈசு"** என்று உற்சாக முழக்கங்களுடனும், ஆடல் பாடல்களுடனும் தேவனை ஆராதிக்கின்றனர் இந்த பீல் விசுவாசிகள். இந்த நேரத்தில் எங்களது மனதினுள், நாம் இப்படி ஆராதிக்கின்றோமா? நம்மிடம் தேவ அன்பு இப்படி பிரவாகித்து ஓடுகிறதா? என்ற கேள்விகள் எழுந்தன. அதன்பின் சகோதரி வஹிதா தேவதாஸ் மற்றும் சகோ. ஃபிராங்க்ளின் இருவரும் ஆராதனை நடத்தினார்கள். நான் வாழ்த்துச் செய்தியளிக்கவும், எனது மனைவி தாவீதைப் பற்றி தேவ செய்தியளிக்கவும் தேவன் கிருபை செய்தார். காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாரும் வெளியே செல்லவும் இல்லை, சாப்பிடவும் இல்லை ஆராதித்துக் கொண்டே இருந்தனர்.

சூழியா கிராம ஆலய போதகரின் மனைவி 10 ஆண்டுகளாக மன நிலை சரியில்லாமல் ஒரு தர்காவில் இருந்தவர். அவரை ஆண்டவர் சந்தித்து நமது நாமத்தை கூறி, மன நிலையை சரி செய்து சொந்த கிராமத்திற்கு அழைத்து வந்ததையும், ஷாலோம் ஊழியர் மூலமாக எப்படி தேவனை அறிந்து கொண்டார் என்பதையும் சாட்சியாக கூறினார்.

அடுத்த நாள் 17ம் தேதி அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், Project–ல் பணிபுரியும் ஊழியர்கள், ஊழியத்தின் முக்கிய பொறுப்பாளர்கள் மற்றும் ஒரு சில பீல் சுதேச ஊழியர்கள் ஆகியோருக்கு Accounts காரியங்களைக் குறித்தும், எப்படி வரவு மற்றும் செலவுகளை கணக்கு வைக்க வேண்டும் என்பதைக் குறித்தும் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 100 கி.மீ. மற்றும் 150 கி.மீ. தொலைவிலிருந்து ஊழியர்கள் வந்து கலந்து கொண்டனர். அவர்கள் கர்த்தருடைய வேலையை உற்சாகமாகச் செய்வதைக் கண்கூடாகக் காணமுடிந்தது. பாட்டுப்பாடி ஜெபித்து கூடுகை ஆரம்பித்து. உண்மையுள்ள மனுஷன், உத்தம இருதயம், மரண பரியந்தம் உண்மை இருந்தால் ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்ளலாம் என்பதைப் பற்றி **பிஷப் தேவதாஸ்** அவர்கள் செய்தியளித்தார்கள். அதன்பின் குழுக்களாக பிரிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அவர்களது பிரச்சினைகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதன்பின் **பிஷப் தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ்** மற்றும் **சகோ. ஜெயராஜ்** ஆகியோருடன் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தோம்.

அடுத்தநாள் 18ம் தேதி **சகோ. கேரட்** அவர்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக நடத்தப்படும் விடுதிகள் மற்றும் பள்ளிகளைக் காணும்படியாக அழைத்துச் சென்றார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பிரயாணப்பட்டு போகும்போது, எங்களுக்குத் தேவையான சாப்பாடு, தண்ணீர் மற்றும் அனைத்துக் காரியங்களையும் தயார் செய்து கொடுத்தனுப்பினார்கள். (வழியில் எதுவுமே வாங்க முடியாது) அவர்களது அன்புபிற்கும் உபசரிப்பிற்கும் அதிக கடமைப்பட்டுள்ளோம். முதலாவதாக மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா கிராம ஆலயத்தை பார்வையிட்டோம். அது ஒரு பெரிய ஆலயம், ஆலயம் முழுவதும் ஜனங்கள் நிரம்பி வழிந்தனர். எனது மனைவி தேவ செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். அதோடு அந்த கிராமத்தில் நடைபெறும் CDC Project சிறுவர்களைப் பார்த்தோம். அவர்களைப் பார்த்தவுடன் எங்களுக்குள் அதிக உற்சாகம் பிறந்துவிட்டது. அங்கு சுற்றியுள்ள கிராமத்துப் பிள்ளைகள் வந்து படிக்கின்றனர். அவர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்படுகின்றது. தாங்கப்படும் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒரு File வைக்கப்பட்டு, அவர்களது காரியங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அங்கும் ஒரு ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. சிறுவர்கள் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்க ஆவலாய் காத்திருந்னர். **"ஜெய் ஈசு"** எனக் கூறி நமது கையைப் பிடித்துக் கொள்கின்றனர். அவர்களது அன்பு எங்களுக்கு கண்ணீரையே வரவழைத்தது என்று கூறலாம். இவர்களுக்காக நாங்களும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற பாரம் எங்களை நெருக்கியது. அடுத்ததாக மெஹந்திகேடா என்ற இடத்திலுள்ள ஆலயத்திற்கு கடந்து சென்றோம். அந்தக் கிராமத்தில் அனைவருமே ஒரு காலத்தில் கொள்ளைக்காரர்களாக இருந்தவர்களாம். இப்போது ஆண்டவரை ஏற்றுக் கொண்டு ஆராதனை செய்து வருகின்றனர். மனம் மாறிய சிலரை போலீஸ் பிடித்துக் கொண்டு போய்விட்டதென்று கூறினார்கள். அவர்கள் சிறைச்சாலையிலும் ஆண்டவரைப் பற்றி கூறிவருகிறார்கள் என்று சாட்சியாகக் கேட்டோம். அந்த ஆலய போதகர் **சகோ. பாலுசிங் பாரியாவை** சந்தித்துப் பேச தேவன் கிருபை செய்தார்.

அடுத்ததாக ராஜஸ்தான் மாநிலத்தில் பிஜல்பூர் என்ற கிராமத்தில் செயல்பட்டு வரும் ஒரு பள்ளி மற்றும் விடுதியினைக் காணும்படியாக அழைத்துச் செல்லப்பட்டோம். விடுதியில் **300க்கும்** அதிகமான சிறுவர்கள் அந்த பள்ளி தலைமை ஆசிரியர் **சகோ. நாத்து டின்டோ** அவர்கள் M.A., B.Ed. படித்துள்ளார்கள். அவருடைய மனைவி பெற்றோர் கொடுத்த இடத்தில் இந்த பள்ளியை நடத்துகின்றனர். அதிக தியாகத்தோடு பொறுமையோடு இதை நடத்திவருகின்றனர். பிள்ளைகள் மிகவும் சந்தோஷமாக உள்ளனர். பிள்ளைகள் தேவ பயத்திலும், வேத வசனத்திலும் வளர்ந்து வருகிறார்கள். வரும் வழியில் இராஜஸ்தானிலுள்ள கோய்க்கா கிராமத்தில் இராஜஸ்தான் ஒருங்கிணைப்பாளர் **போதகர் பாதர் பாரியா** அவர்களையும், கும்புரா கிராம ஆலய போதகர் **சகோ. பத்தியா கராசியா** அவர்களையும் சந்திக்க தேவன் கிருபை செய்தார்.

இந்த பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக பெரிய விடுதிகள் மற்றும் பள்ளிகள் கட்டப்படவேண்டியுள்ளது. பிள்ளைகளின் பெற்றோர்கள் மிகவும் உள்ளடங்கிய கிராமங்களில் வசிப்பதால் இந்த பள்ளிக் கூடம் மற்றும் விடுதிகள் இவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. மேலும் அநேக சிறுவர்களுக்கு ஆதரவாளர்கள் இல்லை. ஒரு மாணவருக்கு மாதம் ரூ. **600/–** கொடுத்து தாங்க முன்வரலாம். மேலும் கட்டிடத் துறையில் நம் பிள்ளைகள் அநேகர் இன்ஜினீயர்களாக உள்ளனர். அவர்கள் இணைந்து பள்ளி மற்றும் விடுதிகள் கட்டிக் கொடுக்க முன்வரலாம். தேவைகளை விசாரித்துச் செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! அதன்பின் அனைத்து ஊழியங்களையும் நிறைவேற்றி அன்றிரவே நாங்கள் சென்னை திரும்பினோம். **பிஷப் தேவதாஸ்** மற்றம் **சகோதரி வஹிதா தேவதாஸ்** இருவரும் எங்களுக்காக ஜெபித்து அனுப்பினார்கள். பணித்தளத்தில் ஊழியம் செய்யும் ஒவ்வொரு பிள்ளைகளும் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓய்வே இல்லை, அதிகமான பயணம். இவற்றையெல்லாம் கண்ட நாங்கள் அதிக பாரத்தோடு திரும்பினோம். இவர்களுக்காக ஜெபிக்க அன்பாய்க் கேட்டுக் கொள்கிறோம். கர்த்தருடைய ஊழியத்தை அதிகமாக நேசித்த நெகேமியா பாழாயிருந்த எருசலேம் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று அழைப்பு விடுத்தபோது எருசலேம் ஜனங்கள் **“.... எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்ல வேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்”** நெகேமியா **2:18.** அதே போல் நம் பீல் ஆதிவாசி ஜனங்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட்டு வருகிறது. அந்த வேலையில் நாமும் எழுந்து நமது கைகளைத் திடப்படுத்தி, ஜெபத்தினாலும், பொருளினாலும் தாங்குவோமாக.

தேவைகள் அநேகம் உண்டு. தற்போது கோய்க்கா என்ற இடத்தில் ஒரு பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. அதற்காக ஜெபியுங்கள். தாங்குங்கள். நாம் ஒரு நாள் இயேசு கிறிஸ்துவை சந்திக்கும்போது கர்த்தருக்காக கொடுத்த, வேலை செய்த நமது கைகளை தமது ஆணி பாய்ந்த கைகளால் தொட்டுப் பார்ப்பார். கர்த்தருக்காக ஓடி ஓடி தேய்ந்து போன பாதங்களைப் பார்ப்பார். அதிக பாரத்தோடு இந்த மிஷனெரி ஊழியத்தை ஜெபித்துத் தாங்கும்படி அழைப்பு விடுத்து, ஜெபித்து முடிக்கின்றோம். நல்ல நிலத்தில் விதைத்த விதை நூறும் ஆயிரமுமாக பலன் கொடுக்கும். கர்த்தர்தாமே வானத்தில் பலகணிகளை திறந்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

# பணித்தள பயணத்தில் ஒரு சாட்சி.....

NúLô. ©úWm Ï Uôo U t ßm NúLôR¬ WgN ² ©úWm Ï Uôo
(Rtd. IOB வங்கி மேலாளர்)

கர்த்தருடைய இனிய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! 15ம் தேதி மாலை 5.50 மணிக்கு சென்னையிலிருந்து அகமதாபாத் செல்லும்படியாக விமானத்தில் ஏறினோம். அதிகமாக ஜெபித்துக் கொண்டே சென்றோம். தேவனுடைய பிரசன்னம் எங்களை சூழ்ந்திருந்ததை நன்றாக உணர முடிந்தது.

விமானத்தில் எங்களது அருகில் ஒரு கண்ணியமான மனிதர் இருந்தார். அவர் பேப்பர் படித்துக் கொண்டு வந்தார். எனது மனைவி வேதத்தினை வாசித்துக் கொண்டு வந்தார்கள். இரண்டு மணிநேர பயணமாகையால் அந்த விமானத்தில் சாப்பிட எதுவும் கொடுக்கமாட்டார்கள். ஆகையால் நாங்கள் எடுத்துச் சென்ற சில திண்பண்டங்கள் இருந்தன. அவற்றை அவருக்குக் கொடுக்கும் போது, அவர் No Thanks எனக் கூறினார். அதிலிருந்து எங்களுக்குள்ளாக சிறு நட்பு உண்டானது. அதன்பின் நடந்த உரையாடலில் அவர் எங்கு போகிறார் என்று நாங்கள் விசாரித்து அறிந்து கொண்டோம். அவர் எங்களிடம் நீங்கள் எங்கு செல்கின்றீர்கள் என்று கேட்கும்போது நாங்கள் அவரிடம், பீல் மக்களைக் குறித்தும், மிஷனெரி பணித்தளங்களைக் குறித்தும் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்து கொண்டோம். உடனே அவர் ஆச்சரியப்பட்டு, **“அவர்கள் மிகவும் முரடர்களே, அவர்களோடு யாரும் பழக முடியாதே”** என்றார். மேலும் தேவ அன்பினைக் குறித்து அவரிடம் பகிர்ந்து கொண்டோம்.

பிஷப் தேவதாஸ் அவர்களும் அவரது மனைவி சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் ஷாலோம் ஊழியங்களை 23 ஆண்டுகளாக எப்படி நடத்தி வருகிறார்கள் என்பதைக் குறித்தும், அந்த ஊழியங்களை பார்வையிட செல்கிறோம் என்றும் கூறினோம். அதற்குள்ளாக நாங்கள் இறங்க வேண்டிய இடமான அகமதாபாத் வந்தது. அவர் ஜெய்ப்பூர் போக வேண்டியவர். நாங்கள் இறங்குவதற்குள்ளாக அவர் தனது இருக்கையில் இருந்து எழும்பி பேக்கிலிருந்து ஒரு கட்டு ரூபாயை எடுத்து, ஷாலோம் ஊழியத்திற்கு காணிக்கையாகக் கொடுத்தார். அவரிடம் முகவரி கேட்டபோது கொடுக்க மறுத்தார். பின்னர் ரசீது அனுப்ப வேண்டும், மேலும் உங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று கூறியபோது முகவரியைத் தந்தார். எங்களால் நம்பவே முடியவில்லை. அவருக்காக சிறு ஜெபம் செய்துவிட்டு சந்தோஷத்தோடு கடந்து வந்தோம்.

நாங்கள் எங்களது தங்குமிடத்திற்கு வந்து அந்தப் பணத்தை எண்ணிப் பார்த்தபோது, அதில் ரூ. 10,000/– கொடுத்திருப்பது தெரிந்தது. ஆவியானவரின் ஏவுதல் இல்லையென்றால் அவர் இப்படி செய்திருக்க மாட்டார். கர்த்தரே ஊழியங்களை நடத்துகின்றார் என்பதற்கு இதுவே சாட்சி எனக் கூறி முடிக்கின்றேன். தேவனுக்கே சகல துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக!

---

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்....” –** மத்தேயு 25:40



# கிறிஸ்மஸ் வந்தாச்சு...



**"உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி".**

**யோவான் 1:9**

உலகத்தை இரட்சிக்க பாலகனாய் பூமியில் கிறிஸ்து அவதரித்த அந்த நன்னாளில், கிறிஸ்துவின் தியாகத்தையும், தாழ்மையையும் நினைத்து நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல் அவருடைய சுவிசேஷத்தை உலகத்திற்கு அறிவிப்பதும் நமது கடமையாகும். கிறிஸ்து பிறந்த அந்த நாளை நினைத்து நாம் கொண்டாடுவது மட்டுமல்ல, நம்மை சுற்றியுள்ள எளியவர்களுக்கு நம்மால் இயன்ற வகையில் உதவி செய்ய கர்த்தர்தாமே நம்மை பலப்படுத்துவாராக!

வருடந்தோறும் கிறிஸ்மஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்மஸ்–ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்மஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 10 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1000/– அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு குறைந்தது ரூ. 500/– அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்மஸ் வெகுமதியாகக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை நவம்பர் மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் அன்பளிப்புகளை கிறிஸ்மஸ்க்கு முன்பாக கொடுக்க உதவியாக இருக்கும்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.

**இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்மஸ்-ஐ வரவேற்போம்!**
**தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!**

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFS Code : BARB0TUTICO

---

நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : MBL0000106)**

---

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

*ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.*

# நாட்டு நடப்புச் செய்திகள்....

அக்டோபர் 14ம் தேதி கர்நாடகத்தில் குடகு, ஹாசன் உள்ளிட்ட பல பகுதிகளில் லேசான பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்து வீடுகளை விட்டு வெளியே ஓடி வந்தனர். இதனால் ஒரு சில வீடுகளில் விரிசல்களும், அநேக வீடுகளில் பாத்திரங்களும் உருண்டோடின. பீதியடைந்த ஜனங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி வீதிகளில் நின்றனர்.

---

அமெரிக்காவின் நியூயார்க் நகரின் மையப்பகுதியான மான்ஹாத்தன் என்ற இடத்தில் அமைந்துள்ள ரிசர்வ் வங்கி மற்றும் அநேக இதர வங்கிகளும், அரசு அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களையும் ரிசர்வ் வங்கியையும், வெடி குண்டு வைத்து தகர்க்கும்படியாக, செல்போன் குண்டுடன் வந்த வங்காளதேசத்தைச் சேர்ந்த தீவிரவாதி, கைஷி ரிஸ்வானுல் அக்சான் நபீஸ் போலீசில் பிடிபட்டான்.

---

இன்றைக்கு உலக அளவில் இருதய கோளாறு மற்றும் புற்றுநோய் ஆகியவை மக்களை மிகவும் அச்சுறுத்தி வருகிறது. இவற்றை குணப்படுத்தும் வல்லமை மிக்க ரத்த உயிரணு ஒன்று இருப்பதை பின்லாந்து நாட்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இவை ரத்த நாளங்களில் இருந்து கண்ணுக்குப் புலப்படாத வகையில் உற்பத்தியாகி பல நன்மைகளை தருகிறது என்றும், இது உடலில் ஏற்படும் புற்றுநோய், இருதய நோய் கோளாறு உள்ளிட்ட பல்வேறு வித நோய்களை போக்கும் நிவாரணியாக திகழ்கிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

---

பாகிஸ்தானின் வடமேற்கில் உள்ள டார்ரா அதாம் ஹில் என்ற நகர் உள்ளது. அங்குள்ள மார்க்கெட்டில் கடந்த 13.10.2012 அன்று தற்கொலை தீவிரவாதி குண்டுவெடிப்பில் 16 பேர் பலியாயினர்; 40 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

நன்றி : www.dailythanthi.com


## எங்களுடன் தொடர்பு கொள்ள

<u>தலைமை அலுவலகம்</u>

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



# கிராம ஆலயம் சூலியா மத்தியப்பிரதேசம்

மத்திய பிரதேசத்தில் அலிராஜ்பூர் மாவட்டத்தில் ஜோபட் தாலுகாவில் சூலியா என்ற கிராமம் அமைந்துள்ளது. இந்த கிராமத்திலுள்ள மக்கள் சண்டை போடுவது, சாராயம் மற்றும் போதை வஸ்துக்கள் உபயோகிப்பது போன்ற பல வித பாவ பழக்கங்களில் வாழ்ந்து வந்தார்கள்.

இப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்த சகோ. மால்சிங் சொஹரியா என்பவருடைய மனைவி சகோதரி. ராம்பாய் அவர்கள் அசுத்த ஆவியினால் பீடிக்கப்பட்டு மிகவும் வியாதியோடு இருந்தார்கள். என்ன வியாதி என்றே கண்டு பிடிக்க முடியவில்லை. திடீரென்று மரித்த சடலம் போன்று ஆகிவிடுவார்கள். திடீரென்று உயிர் வந்து விடும். இப்படியாக கஷ்டப்பட்டார்கள். மனநிலை சரியில்லாதவர் போல் அவரை சங்கிலியால் கட்டி வைத்திருப்பார்கள். சாலையில் கிடக்கும் அழுகின காய்கறிகளை எடுத்து உண்பார்கள். இதையெல்லாம் கண்டு சகோ. மால்சிங் மிகவும் கண்ணீர் சிந்துவார். மந்திரவாதத்திற்கும், மருத்துவத்திற்கும் பணம் செலவு செய்தது மட்டுமல்லாமல் ஜாவ்ரா என்ற இடத்தில் அமைந்துள்ள பெரிய தர்காவிற்குச் சென்று 2 வருடம் மந்திரம் எல்லாம் செய்தும் குணமாகவில்லை. அங்கு அவரது மனைவி தன் தலையை கல்லில் முட்டி முட்டி அழுதார்கள் இரத்தம் சொட்டும் அந்நேரத்தில் வானத்திலிருந்து, மகளே ! எதற்காக நீ உன் தலையை கல்லில் முட்டி இரத்தம் சிந்துகிறாய். உண்மையான தேவன் இயேசு நான் இருக்கிறேன் என்று ஒரு சத்தம் கேட்டது. அதன்பின் கிறிஸ்து அந்த சகோதரியை குணமாக்கினார்.

பின்பு இந்தூர் நகரத்திற்கு சென்று, கணவனும் மனைவியும் கூலி வேலை செய்து கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் கிரேஸ் என்ற சகோதரி இயேசுவைப் பற்றி சுவிசேஷம் கூறியதன் விளைவாக அன்று, அவரது மனைவியோடு பேசிய இயேசு தேவன் யார்? எப்படிப்பட்டவர் என்று முற்றிலும் அறிந்தார்கள். பின்பு அவர் அவர்களுக்காக ஜெபித்தார்கள். பின்பு இருவரும் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று, தங்களது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தரிசனத்தோடு 2002-ம் ஆண்டு, ஷாலோமில் இணைந்து ஊழியத்தை ஆரம்பித்தார்கள். பல்வேறு எதிர்ப்புகளின் மத்தியிலும் 5 பேர் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சபை தற்போது 400 பேர் கொண்ட பெரிய சபையாக கர்த்தர் ஆசீர்வதித்திருக்கிறார். இவ்வூழியருக்கு 3 பிள்ளைகள் உண்டு. குடும்பமாய் தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறார்கள். இந்த கிராம ஆலயம் தேவனுடைய மகிமைக்காக ரூ. 2 இலட்சங்கள் செலவில் கட்டப்பட்டு, 16-09-2012 அன்று சகோ. பிரேம்குமார் (தூத்துக்குடி) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சகோ. மால்சிங் சொஹரியா ஆலய போதகராக இருந்து செயல்பட்டு வருகிறார்.

இந்த கிராம ஆலயம் **இயேசு விடுவிக்கிறார்,** நாலுமாவடி ஊழியத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2012ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - 07.10.2012






இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! ஷாலோம் மிஷனெரி ஊழியத்தோடு இணைந்து பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவ இராஜ்யத்தை கட்டுவதற்கு தேவன் கொடுத்த கிருபைக்காக தேவனை நன்றியோடு துதிக்கிறேன். ஷாலோம் ஊழியம் ஆரம்ப நாளிருந்து நாங்கள் குடும்பமாக இந்த ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தாங்கவும் தேவன் கிருபை பாராட்டி வருகிறார். குறிப்பாக மிஷனெரிகளை தாங்கியும், ஆலயங்களை கட்டிக்கொடுத்தும், ஆதிவாசி சிறுபிள்ளைகளை தாங்கியும் வருகிறோம். பல தேவையோடு இருக்கின்ற இந்த மிஷனெரி பணியை அநேகருக்கு அறிமுகப்படுத்தும்போது தேவ பிள்ளைகள் ஊழியத்தை தாங்க முன் வருகிறார்கள்.

அதன்படி சகோ. S.P.M மனோகர் அவர்கள் குடும்பமும் , சகோ. மார்ச்வின் கிங்ஸ்டன் குடும்பமும் ஒவ்வொரு ஷாலோம் சுதேச ஊழியர் குடும்பத்தை தாங்க முன்வந்தனர். அந்த மிஷனெரி குடும்பங்களான (1) சகோ. விஜய் டாமோர் (2) சகோ. நார்சிங் கல்லாரா ஆகியோரது பிரதிஷ்டை கடந்த 7.10.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று பாளையங்கோட்டை N.G.O.B காலனி C.S.I. பரி. பேதுருவின் ஆலயத்தில் வைத்து நடைபெற தேவன் கிருபை பாராட்டினார். அந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையில் சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள் ஷாலோம் ஊழியங்களை குறித்து பகிர்ந்து கொண்டார்கள். இரண்டு சுதேச ஊழியர்களும் பாடல் பாடி தங்களுடைய சாட்சிகளை பகிர்ந்து கொள்ள, சகோ. சாம் குணசீலன் அவர்கள் சாட்சியினை மொழியாக்கம் செய்தார்கள்.

Rev. K.N. ஜெசுதாசன் அவர்கள் இரண்டு சுதேச ஊழியர் குடும்பங்களையும் பிரதிஷ்டை செய்து தேவ செய்தி கொடுத்தார்கள். மிஷனெரி பிரதிஷ்டை செய்ய வாய்ப்பளித்த, திருநெல்வே–லி திருமண்டல பேராயர், Rt. Rev. Dr. J.J. கிறிஸ்துதாஸ் அவர்களுக்கும், சபைகுரு Rev. Dr. பிரே S. ஜேம்ஸ் அவர்களுக்கும், சபை ஊழியர் திரு. S. அகஸ்டின் அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம். மிஷனெரி குடும்பங்களைத் தாங்க முன் வந்த ஆதரவாளர்களுக்கு நன்றி கூறுகிறோம். கர்த்தர் தாமே தொடர்ந்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

**இன்னும் 32 சுதேச ஊழியர் குடும்பங்களுக்கு ஆதரவாளர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்! தாங்க முன் வாருங்கள்!!**

**"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்" மத்தேயு 9 : 37**

**Prof. C.S.** *கிறிஸ்டோபர்,* பாளையங்கோட்டை (ஷாலோம் செயற்குழு உறுப்பினர்)